viber : 076 636 3378
பக்கங்கள் : 12 + 12

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 042 வள்ளுவர் ஆண்டு 2053 தை 17 ஞாயிற்றுக்கிழமை (30.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



‘நீதிக்கான சேவை யாழில் ஆரம்பம்’

## எதிர்ப்புத் தெரிவித்து உறவுகள் போராட்டம்



11

## போராடி எதனையும் பெறமுடியாது பேசியே பிரச்சினையை தீர்க்கலாம்

### யாழில் நீதி அமைச்சர் அலி சப்ரி



(யாழ்ப்பாணம்)

போராட்டங்களை நடத்துவதன் மூலம் காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்று விடமுடியாது. தமது பிரச்சினைக்கு தீர்வு வேண்டுமாக இருந்தால் அரசுடன் பேசினால் அதற்குரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும் என நீதி அமைச்சர் அலிசப்ரி 11

தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க

# தமிழ்க் கட்சிகளுடன் வெகுவிரைவில் ஜனாதிபதி பேச்சு



### யாழில் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக வெகுவிரைவில் ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார். இதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என யாழில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

*(11ஆம் பக்கம் பார்க்க)*



13 ஆம் திருத்தத்துக்கு எதிராக

## நல்லூரில் முன்னணி இன்று மாபெரும் பேரணி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை 13ஆம் திருத்தச் சட்டத்தினுள் முடக்கும் சதிமுயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் இடம்பெறும் மாபெரும் பேரணிக்கு அனைத்துத் தமிழ் மக்களையும் அணிதிரண்டு வருமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலய வீதியில் ஆரம்பமாகும் மாபெரும் பேரணி நல்லூர் கிட்டுப் பூங்கா வரை சென்று அங்கு பொதுக் கூட்டமும் இடம் பெறும். (ம)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேசுவதற்கு தயார் - ஐ.தே.க

08ஆம் பக்கம் பார்க்க

## கொரோனா 14 மரணம் +982 தொற்று

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 14 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் 11

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நால்வர் பேராசிரியர்களாக பதவி உயர்வு



பேரா. பி. குமரேந்திரன் | பேரா. என்.கெங்காதரன் | பேரா. கே.லிங்கேசியா | பேரா. ஆர். ஸ்ரீகரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூத்த விரிவுரையாளர்கள் நால்வர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ள 11

எல்ல நீர்வீழ்ச்சியில்

## நீராடச் சென்ற நால்வர் பலி

ஒருவரைக் காணவில்லை

(கொழும்பு)

உமா ஓயா - கெரண்டி எல்ல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற 5 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 04

வடக்கு மாகாண

## ஆளுநரின் செயலாளராக திருமதி இளமதி சபாலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி இளமதி சபாலிங்கம் நேற்று முன்தினம் ஆளுநரின் கொழும்பு அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

மும்மொழிப் புலமைவாய்ந்த திருமதி இளமதி சபாலிங்கம் அரச நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சிஅமைச்சு, தபால் சேவைகள் 04

## நாட்டில் மேலும் 82 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம்

07 ஆம் பக்கம் பார்க்க

## இரு பிள்ளைகளை கொன்று தானும் உயிர்மாய்ப்பு

### ஆஸியில் இலங்கையர் கொடூரம்



(பேர்த்)

தனது இரு குழந்தைகளை கொலை செய்து, தானும் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவமொன்று அவுஸ்திரேலியாவின் 11

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NORTH LANKA IIT CITY CAMPUS

UCEM

APPROVED CENTER OF CENTRAL AMERICAN BUSINESS UNIVERSITY - COSTA RICA

APPROVED BY UGC AND UNESCO

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**B.sc in Agriculture Science - 3 Years**

தகைமை: A/L Any 2 Passes

**B.sc in Agriculture Science [Top - Up] 1 Year**

தகைமை: 2 Years Diploma / NVQ Level 6 in Agriculture Science

**M.sc in Agriculture Science 1 Year**

தகைமை: B.sc in Agriculture Science

**P.hD - 3 Years**

தகைமை: Any Master Degree

விண்ணப்ப முடிவுத்திகதி : 10.02.2022

கற்கைநெறி ஆரம்பம் : 12.02.2022

தொடர்புகளுக்கு : North lanka IIT City Campus, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna

T.P : 076 750 4535 / 077 884 9677 / 076 568 8156

(C-3662)


# கஜமுத்துக்களுடன் இருவர் கைது

80 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு கஜமுத்துக்களுடன் மட்டக்களப்பு புல்லுமலையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் எஸ்.சுரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

கைதானவர்களிடமிருந்து 30.8 கிராம் மற்றும் 4.5 கிராம் எடையுள்ள இரு கஜமுத்துக்களும் கடத்தலுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம)


## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, $A_1$ UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, Jaffna.

TP : 077 780 3970, 074 007 1970

(9303)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்

(9922)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

லண்டனில் இருக்கும் (P.R) 81 ஆம் ஆண்டு பிறந்த, லக்ணத்தில் செவ்., A/L சித்தி (லண்டனிலும் படித்தவர்) இவருக்கு படித்த, ஆங்கிலம் நன்றாக எழுத, பேச (கொம்பியூட்டர் தெரிந்த) பெண் பார்க்கின்றோம். (இந்து /கத்தோலிக்கம்)

(9916)

075 589 6848

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(9771)

☎-070 640 5951

e-mail : engchelvam@gmail.com


# மரண அறிவித்தல்



## திருமதி மேரி லூட்ஸ் கிறிஸ்தோப்பர்

( மணி ரீச்சர் )

(ஓய்வுபெற்ற ஆசிரியை - பெரியவிளான் றோ.க.தமிழ்க் கலவன் பாடசாலை)

**மண்ணில் : 17.02.1936 விண்ணில் : 29.01.2022**

சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி லூட்ஸ் கிறிஸ்தோப்பர் (மணி ரீச்சர்) அவர்கள் நேற்று (29.01.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பரின் பாசமிகு மனைவியும் றெஜினோல்ட் (றெஜி - பிரான்ஸ்), டெய்சி (டென்மார்க்), டொறின் (கனடா), ஜெனற் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும் மஞ்சுளா (பிரான்ஸ்), கிறிஸ்ரி (டென்மார்க்), நேசன் (கனடா), றூபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியும் கிறிஷாந்தி - ஹரிதீப், வினோஜ், வினித் (டென்மார்க்), டானியல், கெவின், புளோரா (பிரான்ஸ்), நீல், ஜேசன் (கனடா), ஜிவோன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இம்மானுவேல், எலியாஸ் (மென்மார்க்) ஆகியோரின் செல்லப் பூட்டியும் காலஞ்சென்ற றோசம்மா, அருட்சகோதரி கஷ்மீர் (தி.கு), அருட்சகோதரி யூலியா (தி.கு), அருளானந்தம், மாசிலாமணி (பபி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஜோசேப்பு, மரியமலர், அருளானந்தம் - காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை, அனி (ஜெர்மனி), காலஞ்சென்ற சிறில், காலஞ்சென்ற ஹரியற், அம்புறூஸ், லில்லிறோசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (31.01.2022) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காக அன்னாரின் புகழுடல் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் புனித யுவானியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஜெனற் (மகள் - இலங்கை) - 0094112527998, 077 140 3801
றெஜி (மகன் - பிரான்ஸ்) - 0033984506830
டெய்சி (மகள் - டென்மார்க்) - 004575580246
டொறின் (மகள் - கனடா) - 0019055029374

(9935)

சிறுவிளான், இளவாலை.

தகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளுக்கு ஆபத்தாக மாறிவரும் பயங்கர உயிர்க்கொல்லி 'நியோகோவ் வைரஸ்'

(பீஜிங்)

**ஓமிக்ரோன் வைரஸ் தொற்று உலக அளவில் மிக வேகமாக பரவி வரும் நிலையில், கொடிய உயிர்க்கொல்லி தன்மையுடனான வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.**

அதிக உயிரிழப்பை ஏற்படுத்தும் புதிய கொவிட் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக சீன விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

சீனாவின் வுஹான் வைராலஜி ஆய்வகம் மற்றும் சீன அறிவியல் அக்கடமி விஞ்ஞானிகள், கொரோனா குடும்பத்தைச் சேர்ந்த 'நியோகோவ்' என்ற வைரஸ் குறித்து ஆய்வு செய்து விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

"வௌவால்களிடம் நியோகோவ் என்ற கொரோனா வைரஸ் காணப்படுகிறது. நியோகோவ் வைரஸில் ஒரு மரபணு மாற்றம் ஏற்பட்டால் கூட மனிதர்களுக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்படும் ஆபத்து உள்ளது. இது அதிக உயிரிழப்பை ஏற்படுத்தும் வைரஸாகும்.

அதாவது, இவ் வகை வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரில் 3 பேரில் ஒருவர் உயிரிழக்கக் கூடும்" என்று ஆய்வறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கையில்,

மனிதர்களிடம் ஏற்படும் 75 வீத தொற்று நோய்களுக்கு விலங்குகள் தான் ஆதாரமாக இருக்கின்றன. கொரோனா வைரஸ் எப்போதுமே விலங்குகளில் தான் இருந்து வருகின்றன.

ஆய்வுகளின் அடிப்படையில் நியோகோவ், கொவிட்-19 வைரஸ் போலவே மனித உடலில் ஊடுருவக் கூடியது. இந்த வைரஸ் இன்னும் ஒருமுறை உருமாறினால் அது மனிதர்களைத் தாக்கும் திறன் பெற்றுவிடுமாம். இந்த வைரஸ்ும் 2012 இல் சவுதியில் உருவான மெர்ஸ், ஒரே தன்மையுடையது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெர்ஸ் வௌவால்களில் உருவாகி பின்னர் ஒட்டகங்களுக்குப் பரவி அதன்பின்னர் மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியவை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# வாரத்தில் நான்கு நாட்கள் அலுவலகத்தில் இருக்க வேண்டும்

## கிராம உத்தியோகத்தர்களுக்கு புதிய அறிவிப்பு

(கொழும்பு)

ஒழுக்காற்று காரணங்கள் போன்ற அவசர மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளைத் தவிர, கிராம உத்தியோகத்தர்களை உரிய காலத்தில் அல்லது வாக்கு எண்ணிக்கை முடியும் வரை இட மாற்றம் செய்யக் கூடாது என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

அதேபோல், திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய கிழமைகளில் கிராம உத்தியோகத்தர்கள் காலை வேளைகளில் அலுவலகங்களில் தங்கியிருக்க வேண்டும் எனவும் எஞ்சிய நாட்களை களப்பணிகளுக்காக விடுவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் நாளை மறுதினம் பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் ஜூன் 15 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

கொவிட் தொற்றுநோய் காரணமாக 2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலுக்கான பி.சி. படிவங்களை வீடுகளுக்கு விநியோகிக்காமலிருக்க தேர்தல் ஆணையம் சமீபத்தில் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# குடிநீர் போத்தலுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கம்

(கொழும்பு)

குடிநீர் போத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள உச்சபட்ச சில்லறை விலையை இரத்துச் செய்து அதிவிசேட வரத்தமானி வெளி யிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையினால் நேற்று முன்தினம் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குடிநீர் போத்தல்களுக்கான விலை நிர்ணயிக்கப்பட்டது.

இதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் சாந்த திசாநாயக்கவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து
புன்னாலைக்கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில்
இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோவில்
வீதியில் 6 பரப்புக் காணி 2 பரப்பாகவும்
1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
விற்பனைக்குண்டு.

**(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 Km தூரம்)**

**தொடர்பு**

**077 658 5999**

(9914)


# 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த இளம் பாராளுமன்ற உறுப்பினராக சாணக்கியன் தெரிவு

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த இளம் பாராளுமன்ற உறுப்பினருக்கான விருது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

Institute of Politics என்ற அமைப்பினால் குறித்த விருது இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.



குறித்த விருது வழங்கும் நிகழ்வானது முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இடம்பெற்றிருந்தது.

எனினும், மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புகள் மற்றும் வேறு சில முக்கிய காரணங்களினால் இரா.சாணக்கியன் குறித்த நிகழ்வில் பங்கேற்றிருக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வாரம் Institute of Politics என்ற அமைப்பின் அலுவல கத்தில் வைத்து இரா. சாணக் கியனுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது. (நி)


## கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் ஆயுட்கால உறுப்பினரான **திரு. கு.இந்திரன்** அவர்களின் பாசமிகு தாயாரும் **திரு.சி. அர்ஜுன்** அவர்களின் அன்பு அம்மம்மாவுமான

திருமதி **தனலக்ஷ்மி குலசிங்கம்**

அவர்கள் 29.01.2022 இறைபதம் அடைந்தார். அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் (K.C.C.C & K.C.C.C.S.C)**

(C-3665)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில்
1ஆம் வீதியில் 6 பரப்புக் காணி 2 பரப்பாக
பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**நாவற்குழி சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்.
வீடமைப்பதற்கு நல்ல சூழல். (நிலப்பரப்பு)
ஒரு பரப்பின் விலை 3.5 இலட்சம்.**

**தொடர்பு**

**076 890 9259**
**077 015 0353**

(9914)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை
உதவி அதிபர்
**இ.லோ.கிறிஸ்ரன்**
அவர்களின்
அன்புத் தாயார்
அமரர்

**லோறன்ஸ் பெலிக்சியா**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் எமது உதவி அதிபருக்கும் அவரது குடும்ப உறவுகளிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்**
(9930)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## சிறுநீரகம் தேவை

41 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தைக்கு அவசரமாக "B" POSITIVE சிறுநீரகம் தேவை.
(C-1615)

தொடர்பு
**076 298 3140**

## சிறுநீரகம் தேவை

B அல்லது $O^+$/ $O^-$ சிறுநீரகம் தேவை. 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் 30 வயதிற்கு மேற்பட்ட பெண்களும் விரும்பத்தக்கது.
(C-1616)

தொடர்பு
**076 666 1351**

## GRADE 6 Mathematics English Medium

புதிய வகுப்புகள் பிரபல கல்லூரி ஆசிரியரினால் நடாத்தப்படுகின்றது.
இல.213, அரசடி வீதி, கந்தர்மடம்
(விக்னேஸ்வரா பாலர் பாடசாலை)
5.2.2022 சனிக்கிழமை காலை 8 மணி
(9929)
✆- 077 864 5971

## ஆளுநரின்...

அமைச்சு மற்றும் வேறு அமைச்சுக்களில் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றியவர்.

மேற்படி ஆளுநரின் செயலாளர் கொழும்பிலும் யாழிலுமாக கடமையாற்றுவார். (ம-104)

## பணிப்பெண் தேவை

தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.
இடம்: கிளிநொச்சி மற்றும் கொழும்பு
(9931)
**077 711 1130**

## Yarl Direct (Pvt) Ltd

உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை தற்போது மாலை சந்தையில் மிகக் குறைந்த கட்டணங்களுடன்.
இலங்கையின் எப் பாகத்திற்கும் 24 மணித்தியாலத்திற்குள் விநியோகம்.
(C-3664)
**077 779 9229**

## நீராட...

11 பேர் நீராடச் சென்றதுடன் அவர்களில் 5 பேர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காணமல்போனவர்களில் நால்வர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போன நபரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## விலைமனுக் கோரல்

யாழ். மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயம் ஒன்றில் பின்வரும் வேலைகளுக்கு விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

- கட்டட வேலை
- தச்சு வேலை
- சிற்ப வேலை
- மின்சார வேலை
- வர்ணப்பூச்சு வேலை

குறிப்பு : தரமான தீராந்திகள் மற்றும் இடிபாட்டுக் கற்கள் போன்றனவும் ஏலத்தில் வழங்கப்படவுள்ளன.
(9936)

தொடர்புகளுக்கு
**076 170 7073**

## காணி விற்பனைக்கு

நொத்தாரிஸ் தோட்டம் கரணவாய் மேற்கில் அமைந்துள்ள நில.பர 21 விஸ்தீரணம் கொண்டதும் ஈரப்பலா மரங்களும், 100 தென்னம்பிள்ளைகளும், எக் காலமும் நீர் வற்றாத வெட்டுக் கிணறும், வேறு கிணற்றில் 4 அடி வழிவாய்க்காலும், ஒருநாள் தண்ணீர்ப் பங்கும், நான்கு பக்கமும் கொங்கிறீட் தூண் நிறுவப்பட்டு முட்கம்பியால் அடைக்கப்பட்ட வேலியுடன் கூடிய தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. (நீதிமன்றால் பிரிவிடல் செய்யப்பட்ட உறுதி) நான்கு இன்ஞ் வாட்டர்பம் புதிதாக போடப்பட்டது. பருத்தித்துறை - யாழ்ப்பாண வீதிக்கு 1/4 மைல் தூரத்தில் உள்ளது.

நேரில் தொடர்பு கொள்ளவும்.

வே. தம்பிப்பிள்ளை
"சிறிபதி இல்லம்"
இலகடி, அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
(C-3663)
**076 332 1357**

## 16ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
21 . 01 . 1941

மறைவு
15 . 01 . 2022

கீரிமலை வீதி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **முருகையா நகுலேஸ்வரன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்கள் கடந்த 15.01.2022 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று 30.01.2022 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கீரிமலை வீதி,
மாவிட்டபுரம்.
குடும்பத்தினர்
077 922 5648
(9923)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
16 . 05 . 1937

இறப்பு
29 . 01 . 2022

கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மகோற்சவ உபயகார குடும்பத்தவர்

**குலசிங்கம் தனலக்ஷ்மி**

அன்னார் ஆலய ஆரம்பகால குடும்பம் சார்ந்தவரும் ஆலய வளர்ச்சியில் முன்னின்று செயற்பட்ட குடும்பத்தவரும் ஆவார். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியை பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

நிர்வாக சபை
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
கொக்குவில்
(9939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட மறுசீரமைப்பிற்கான பொறிமுறைகள்

## சர்வதேச கடப்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும்



(கொழும்பு)

சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கக்கூடிய அரசாங்கம், அதனை முன்னிறுத்திய உள்ளகப்பொறி முறைகள் சர்வதேச நியமங்களையும் கடப்பாடுகளையும் பூர்த்திசெய்யும் வகையில் அமைந்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி, வலியுறுத்தியுள்ளார்.

அதிலுள்ள குறைபாடுகளை அடையாளங்காண்பதற்கு விரிவான கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையில் பணியாற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை விளக்கமளித்திருந்தார்.

இதன்போது மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கு இலங்கை தயாராக இருப்பதாகக் கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின்போது தான் அளித்த வாக்குறுதியை மீண்டும் நினைவுகூர்ந்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பொறுப்புக்கூறல், சட்ட மறுசீரமைப்பு, நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாக இலங்கை அரசாங்கம் கணிசமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

வெளிவிவகார அமைச்சருடனான இச்சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டியும் பங்கேற்றிருந்த நிலையில், நிலைமாறுகால நீதியை உறுதிப்படுத்தல், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற் கொள்ளல் ஆகிய விடயங்களில் அவற்றுடன் தொடர்புடைய உள்நாட்டுக்கட்டமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு அவர் தனது பாராட்டை வெளிப்படுத்தினார்.


அதேவேளை சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கக்கூடிய அரசாங்கம், அதனை முன்னிறுத்திய உள்ளகப்பொறிமுறைகள் சர்வதேச தரநியமங்களையும் கடப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமாகும் என்றும் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் வலியுறுத்தியுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே ஹனா சிங்கர் ஹம்டி மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

சட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் சட்ட அமுலாக்கத்தினால் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுடன் சமாந்தரமாகப் பயணிப்பதாக அப்பதிவில் சுட்டிக் காட்டியுள்ள அவர், இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அவற்றிலுள்ள குறைபாடுகளை அடையாளங்காண்பதற்கும் தீர்வுகளைக் கண்டறிவதற்கும் விரிவான கலந்துரையாடல்களும் ஆராய்வும் இன்றியமையாததாகும் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் (கண்ணன்)



கரம்பன் மேற்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட **சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன்** அவர்கள் 28.01.2022 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சங்கரப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், ஐயம்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் பாசமிகு கணவரும், விமல்ராஜ், யுகராஜ், டினேஸ்ராஜ், மதனராஜ், அருண்ராஜ் ஆகியோரின் அன்பு தந்தையும், நகுலேஸ்வரி, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, கைலாசபிள்ளை (நியூ.கமல் செரமிக்), காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கஜேந்திர நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும்,ஜீவிதா, சோபா, றொசானி, அஜந்தா ஆகியோரின் பாசமிகு மாமனும், செல்லத்துரை, தவமணி, சிவயோகம், காந்தமலர், யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனனும், நருமிகா, நரோமிகா, கிரிஷிகா, சஞ்சனா, கிரிஸ்வின், கஸ்மிதா, கஸ்மிதன், விதுன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 30.01.2022 இன்று காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (9917)

**539/4 நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# இராசிபலன்

**30.01.2022**
தை 17, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி பிற்பகல் 4.12 மணிவரை

பூராடம் பின்னிரவு 11.36 மணிவரை
சுபநேரம் -9.36-11.06 மணிவரை
இராகு காலம் -8.06-6.36 மணிவரை

சந்திராஷ்டமம்-
ரோகிணி

**வளவன்**




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தினரிடையே இருந்த மனஸ்தாபங்கள் அகலும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது,கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்; ரோக பயமுண்டு.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.




சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாடு சிறப்பினைத்தரும், உற்சாகமான நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.




பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம் பெறும் வாய்ப்புண்டு.




பேச்சில் கனிவு பிறக்கும்,பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.




எடுத்த காரியங்களை முடிக்க உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.




மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




பயணங்களால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சிறிய வேலையொன்றுக்காக சற்று அலைய நேரிடலாம், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.




தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும் தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடவுளைத் தவிர வேறு யாருக்கும் அடிமையாகாதே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 இற்கு எதிர்ப்பு

# வட்டுக்கோட்டையில் முன்னணியினர் வாகனப் பேரணி!

(யாழ்ப்பாணம்)

13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மாபெரும் பேரணி ஒன்று வட்டுக்கோட்டையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்பட்டது.



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டை அலுவலகத்திற்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட வாகனப்பேரணியானது வட்டுக்கோட்டை தொகுதி முழுவதும் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பேரணியை முன்னெடுத்தவர்களால் துண்டு பிரசுரங்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

பிரேத பெட்டியினை தாங்கியவாறு முன்னெடுக்கப்பட்ட பேரணியில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரான கனகரத்தினம் சுகாஷ், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர்கள், அக்கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-5-33-104)

## 3 ஆம் கட்ட தடுப்பூசி செலுத்தப்படும் இடங்கள்

| திகதி | பிரிவு | தடுப்பூசி செலுத்தப்படும் இடம் |
|---|---|---|
| 30.01.2022 திங்கட்கிழமை | கொழும்புத்துறை | பாசையூர் சென்.அன்ரனி திருமண மண்டபம் |
| 01.02.2022 செவ்வாய்க்கிழமை | வண்ணார்பண்ணை | நாச்சிமார் கோவில் திருமண மண்டபம் |
| 02.02.2022 புதன்கிழமை | நல்லூர் | நல்லூர் துர்க்கா மணி மண்டபம் |
| 03.02.2022 வியாழக்கிழமை | நாவாந்துறை | GS Office - J/84 Near Market நாவாந்துறை |
| 05.02.2022 சனிக்கிழமை | | யாழ்.மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை |

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தால் இவ் வருடத்திற்கான மின்னியலாளர், தாதிய உதவியாளர் , மோட்டார் வாகனப் பொறிவலர் மற்றும் குளிர்சாதனப் பெட்டி மற்றும் காற்றுச்சிராக்கி பொறிவலர் ஆகிய பயிற்சிகளுக்கான வகுப்பறைப் பாடநெறியுடன் கூடிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட NVQ மட்டம் 4 இற்கான சான்றிதழினைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம் , இல.44 சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 07.02.2022 ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட முகாமையாளர் ஞா.தே.இரத்னகுமார் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## பசுமை அமைதி விருது வழங்கும் நிகழ்வு - 2021

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய பசுமை இயக்கம் 2021 ஆம் ஆண்டு நடத்திய சூழல் பொது அறிவும் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சூழலியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்த பசுமை அமைதி விருதுகளும் 2021 ஆம் ஆண்டின் சிறந்த சூழல் நேயச் செயற்பாட்டாளருக்குத் தால காவலர் மு.க.கனகராசா ஞாபகார்த்தப் பசுமை விருதும் வழங்கும் பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் கலந்து கொள்வார். (4)





யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கு பூமணியம்மா அறக்கட்டளையினரால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.



செம்பியன்பற்று வடக்கு தனிப்பனைக் கிராமத்தின் மடுமாதா விளையாட்டுக் கழகத்திற்கான களஞ்சிய அறையும் ஒன்றுகூடல் மண்டபமும் அன்மையில் திறந்து வைக்கப்பட்டது.

(படம் : நெடுஞ்செழியன்)

## அபிராமிப்பட்டர் உற்சவம்

(குப்பிழான்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்தில் தை அமாவாசைத் தினத்தை ஒட்டிய அபிராமிப் பட்டர் விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து அம்பாளுடன் அபிராமிப்பட்டர் திருவீதி உலா வரும் திருக்காட்சியும் நடைபெறும். (4-18)

(குப்பிழான்)

குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தில் தை அமாவாசை தினத்தை ஒட்டிய அபிராமிப்பட்டர் உற்சவம் நாளை திங்கட்கிழமை மாலை நடைபெற வுள்ளது.

பிற்பகல் 05.30 மணியளவில் விசேட அபிஷேக பூசைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து இரவு 7 மணிக்கு அபிராமிப்பட்டர் அருளிய (4-18)



அமரர்.கிருபராஜா மதுசூதனின் ஆறாவது ஆண்டு நினைவினை முன்னிட்டுச் சுன்னாகம் மயிலணி நண்பர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவு, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவின் இணை அனுசரணையில் நேற்று சனிக்கிழமை மயிலணி சைவ மகாவித்தியாலய மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. (படம் : ரவிசாந்)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ந. மகேஸ்வரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும்.(4-6)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு சந்தாதோட்டம் அருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது என ஆலய தர்ம பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)

## காவியச் சங்கமம் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலை இலக்கிய ஜோதி நசீரா அப்துல் அஸீஸின் 'காவியச்சங்கமம்' நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஒஸ்மானியா கல்லூரியில் யாழ்.கதிஜா மகா வித்தியாலய அதிபர் ஜான்ஸி கபூன் தலைமையில் நடைபெறும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி ஏற்றாதவர்களே

## மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்

### சுகாதார மேம்பாட்டு அலுவலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

**கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களே அதிகளவில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர் என சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரஞ்சித் படுவான்துடுவ தெரிவித்தார்.**

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் மற்றும் ஒட்சிசன் தேவைப்பாடுடைய கொவிட் தொற்று உறுதியாளர்களின் விபரங்களை திரட்டிய போது அதில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

நாட்டில் ஒமிக்ரோன் திரிபினால் பாதிக்கப்பட்ட கொவிட் தொற்று உறுதியாளர்கள் அதிகளவில் பதிவாகி வருவதுடன் டெல்டா திரிபினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவதனை அவதானிக்க முடிகின்றது என அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களே தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் கூடுதலாக சிகிச்சை பெறுவதாகவும், ஒட்சிசன் தேவைப்பாடு இவர்களின் மத்தியில் அதிகளவில் காணப்படுவதாகவும் அவர் ஊடகங்களிடம் தெரிவித்தார். (நி)

# 82 புதிய ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 82 புதிய ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர இதனை தெரிவித்தார். 88 மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டதில் 6 டெல்டா வைரஸ் தொற்றாளர்களும் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 16 ஆயிரம் கிலோ பீட்ரூட் மீட்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 16 ஆயிரம் பீட்ரூட் தொகை சுங்கப்பிரிவால் கைப்பற்றப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு இறக்குமதி எனக் கூறியே குறித்த பீட்ரூட் தொகை நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி 30 இலட்சம் என சுங்க திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் சுதந்த சில்வா தெரிவித்தார்.

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சந்தேகத்திற்கிடமான குளிர்சாதனப் பெட்டிகள் அடங்கிய கொள்கலன்களிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டதுடன் வத்தளையில் உள்ள நிறுவனமொன்றுக்கு சொந்தமான இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 53 ஆயிரம் உருளைக்கிழங்கு தொகையொன்றினையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவை மிகவும் நுட்பமான முறையில் கொள்கலன்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்ததுடன் இது பற்றிய மேலதிக விசாரணைகளை சுங்கப்பிரிவினர் மேற்கொண்டு வருவதாகவும் பேச்சாளர் குறிப்பிட்டார். (நி)

# 7 மாடி கட்டடத்தில் இருந்து தவறி விழுந்து சிறுவன் உயிரிழப்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் ஏழு மாடி கட்டடத்தில் இருந்து தவறி விழுந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மாலை பம்பலப்பிட்டி கிரெஸ்டர் பகுதியில் 7 மாடி கட்டடத்தில் இருந்து சிறுவன் தவறி விழுந்துள்ளான்.

சம்பவத்தில் காயமடைந்த 15 வயது சிறுவன் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளான கார்

### ஒருவர் பலி, மூவர் படுகாயம்

(புத்தளம்)

கற்பிட்டி, நாச்சிக்கள்ளி பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில்இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாலக்குடா பகுதியில் திருமண நிகழ்வை முடித்துவிட்டு சென்ற காரொன்றே வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காரில் பயணித்த மூவர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் கற்பிட்டி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முற்பட்ட வேளை ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: 40 ½ சூரி 5 செவ் 6 இல்
உயரம்: 176 cm
தகைமை/தொழில்: BSc Engineer (Electronic) Data Scientist
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ: B/12223

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: சூரி 11 செவ் 9 இல்
தகைமை/தொழில்: A/L ஆய்வுகூட உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த தனியார், அரச உத்தியோகம்
தொ.இ: B/12225

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 8 சூரி 7 செவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA,MA அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்
தொ.இ: B/12226

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: சூரி 7 செவ் 5 இல்
உயரம்: 6'1"
தகைமை/ தொழில்: A/L சுப்பர் மாக்கெட்
எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்
தொ.இ: B/12227

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 85 சூரி.செவ் 7 இல்
உயரம்: 163 cm
தகைமை/தொழில்: Diploma In Nursing
எதிர்பார்ப்பு: தகுந்த அரச.தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12312

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 31.5 சூரி 11 செவ் 3
உயரம்: 160 cm
தகைமை/தொழில்: கல்வியியற்கல்லூரி ஆசிரியை
எதிர்பார்ப்பு: தகுந்த தனியார், அரச உத்தியோகம் வெளிநாடு எனின் கனடா மட்டும்
தொ.இ:G/12313

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: சூரி 9 செவ் 7 இல்
தகைமை/தொழில்: சித்த மெடிசின்
எதிர்பார்ப்பு: தகுந்த தனியார்,அரச உத்தியோகம்
தொ.இ:G/12315

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 14 சூரி 9 செவ் 12 இல் உயரம்: 173 cm
தகைமை/தொழில்:A/L லிற்றோ காஸ் நிறுவனத்தில் கணக்காளர்
எதிர்பார்ப்பு: படித்த தனியார், அரச உத்தியோகம் வெளிநாடு ஏற்கப்படும்
தொ.இ:G/12317

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

# கூறுவிலை கோரல்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியால் நடாத்தப்படும் பானை முறையிலான வடிகலன் பொறித்தொகுதியை திருத்தம் செய்வதற்கான கூறுவிலையினையும், இதற்கான புதிய வேணர்(தானியங்கி) பொருத்துவதற்கான கூறுவிலையினையும் தனித்தனியாக வழங்கப்பட வேண்டும். கூறுவிலையினை இத்துறை சார்ந்த அனுபவம் உள்ள தொழில்நுட்பவியலாளர்களாலும் பதிவு செய்யப்பட்ட கம்பனியிடம் இருந்தே கூறுவிலைகள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன (இத்தொழில் நுட்பவியலாளர் இதுவரை திருத்தம்/ புதிதாக அமைத்த பொறித்தொகுதி பற்றிய அனுபவ விபரத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்/ திருத்தம் செய்ய வேண்டிய பொறித்தொகுதியை அலுவலக வேலை நாட்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணி வரை பார்வையிடலாம். இதற்காக எமது தொலைபேசி இலக்கம் 0212050854 ஆகும். கூறுவிலைகள் அனைத்தும் 11.02.2022 திகதிக்குள் கிடைக்கக்கூடியவாறு தலைவர் தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ சங்கங்களின் கொத்தணி வரணி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ ஒப்படைக்கலாம் என்பதனை அன்போடு அறியத்தருவதோடு ஏற்கனவே இது தொடர்பாக வலம்புரி பத்திரிகையில் பிரசுரித்த 30.12.2021 திகதிய விளம்பரமும் ரத்து செய்யப்பட்டு புதிதாக விண்ணப்பம் கோரப்படுகின்றது: விண்ணப்பங்கள் அனைத்தும் நிர்வாக சபையில் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொண்டவருக்கு மட்டும் அறிவித்தல் வழங்கப்படும்.

தலைவர்
க.இராசதுரை
தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ சங்கங்களின் கொத்தணி வரணி
(C-3661)

# வேலை வாய்ப்பு

கொழும்பில் பிரசித்தி பெற்ற சொக்லட், பிஸ்கட், ரீசேட் ஆடைத்தொழிற்சாலைகளில் லேபல், பக்கிங்களில் ஆண்/ பெண் வயது 17-40 மாதச்சம்பளம் 30.000/=- 45.000/= கல்வி, மொழி முன்னனுபவம் அவசியமில்லை. வரும் நாளிலே வேலை வாய்ப்பு நம்பிக்கை உள்ளவர்கள் அணுகுங்கள் (C-1614)

070 268 6346

# மணமகள் தேவை

1987 இல் பிறந்த 7 இல் செவ் வாய் 21 1/2 பாவம் உடைய பாடசாலை O.E.S அரச உத்தியோகம் பொருத்தமான மணமகள் தேவை.

077 572 3645


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை சித்தர் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள்

## குருபூசை தினம் இன்றாகும்



ஈழத்து சித்தர்கள் வரிசையில் வைத்து போற்றப்படுபவரும் நயினாதீவு சுவாமிகள் என அழைக்கப்படுபவருமாகிய நயினை ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் ஆறுமுகம் பார்வதி தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக 1896 இல் அவதாரம் செய்தார்கள். இவரது இயற் பெயர் தம்பிமுத்து என்பதாகும்.

இவர் சிறு வயதில் நயினாதீவு தில்லையம்பல வித்தியாசாலையில் கல்வி பயின்றார்.

இள வயதில் இருந்தே இவரிடம் ஆன்மிக நாட்டமும் கவி பாடும் திறனும் இருந்தது.

கல்வியில் நாட்டம் குறைந்து ஆன்மிகத் தாகம் மிக்கவராய் மாறி வந்த இவரை தமையனார் பொறளை என்னும் இடத்தில் உள்ள தனது சுருட்டுக் கடையில் தனக்கு உதவியாக வைத்திருந்தார். இக்காலத்தில் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த ஒரு பெரியாரை அவர் சந்திக்க நேரிட்டது.

அப்பெரியார் முத்துக்குமாரு இருந்த இடத்தில் சில நாட்கள் தங்கி இருந்தார். அவர் தன்னை ஆளவந்த சற்குரு இவர் என்பதை அப்போது அறிந்திருக்கவில்லை.

இவர்கள் இருவருக்கும் இறுக்கமானதொரு ஆன்மிகத் தொடர்பு ஏற்படலாயிற்று. அந்தப் பெரியாரும் முத்துக்குமாருவும் ஒரு நாள் கதிர்காமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கு கதிரமலைக்குச் செல்லும் வழியில் இரவு ஒரு மரத்தடியில் இருவரும் தங்க நேரிட்டது.

அந்த நிசப்தமான இடத்தில் நிசப்தமான வேளையில் முத்துக்குமாரு தீட்சையும் உபதேசமும் கொடுக்கப்பட்டது. சற்குருவாக வந்து தன்னை ஆட்கொண்ட குருநாதனை போற்றி வழிபட்டு நின்றார். குருவும் சீடரும் மறுநாள் கதிர்காமம் சென்று வழிபட்டு கொழும்பு திரும்பினர்.

சிறிது காலத்தின் பின் திருவண்ணாமலையில் சித்தர்களும் தவயோகிகளும் வாழும் அருணசலக் குகைகளிலும் சில வருடங்கள் சமாதி நிட்டையில் அமர்ந்திருந்தார்.

பின்னர் சுவாமிகள் ரமண மகரிஷியுடன் சில காலம் தங்கி இருந்து அவரின் ஆன்மிக போதனைகளால் கவரப்பட்டு தவயோக வாழ்வு வாழ்ந்தார்கள்.

யாழ்.வண்ணார்பண்ணை சிவலிங்கப் புளியடியில் உள்ள தன்னடியார் சிவசுப்பிரமணியத்தின் இல்லத்தில் தங்கி இருந்து அருள் ஆசி நல்கிய சுவாமி சர்வதாரி வருஷம் உத்தராயண காலத்தில் தைத்திங்கள் 13 ஆம் நாள் 26.01.1949 ஆம் ஆண்டு புதன்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு சமாதி நிலையில் இருந்தவாறே சமாதி அடைந்தார்கள்.


சுவாமிகளின் திரு உடல் நயினாதீவில் காட்டுக்கந்தன் ஆலய பின்புறமாக சமாதி வைக்கப்பட்டு சோமஸ்கந்த ஈஸ்வரர் ஆலயமாக திகழ்கிறது.

சித்திரமுத்தடிகளால் ஆரம்பிக்கப்பட்ட அருள் ஒளி மடமும் பக்கத்தே அமைந்திருக்கிறது. சுவாமிகளின் குருபூசை வருடா வருடம் சுவாமிகளின் சமாதி ஆலயமான சோமஸ்கந்த ஈஸ்வரர் ஆலயத்தினரால் அனுஷ்டிக்கப்படுகிறது.

**நயினை கலாபூஷணம்**
**நாகமணி.கோபாலகிருஷ்ணன்**
**தலைவர் சப்த தீவக திவ்ய ஜீவனசங்க சமாசம்.**

# அதிவேக நெடுஞ்சாலையில் பாரவூர்திகள் மோதல்

## இருவர் உயிரிழப்பு



அதிவேக நெடுஞ்சாலையின் கடுவல - கடவத்த பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட பாரிய வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.


இரு பார ஊர்திகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# எரிவாயு கசிவு காரணமாக பற்றி எரிந்த வியாபார நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாமாங்கம் வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது. இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வர்த்தக நிலையம் எரிவாயு கசிவு காரணமாக தீப்பற்றி உள்ளதாக முதல் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. தீப் பரவல் காரணமாக வியாபார நிலையத்திற்குள் இருந்த அனைத்து பொருட்களும் கருகி நாசமாகியுள்ளன.



குறித்த தீப்பரவல் தொடர்பாக மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

# சுதந்திரக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார்

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கும், தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்கும் சுதந்திரக் கட்சி உள்ளடங்கலாக அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இருப்பினும் நல்லாட்சி அரசாங்கத்தை அமைத்ததை போன்ற கூட்டணியை சுதந்திரக் கட்சியுடன், உருவாக்க நடவடிக்கையும் எடுக்கப்படாது என அக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

மாறாக தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு அல்லது தேசியக் கொள்கையை தயாரிப்பதற்கு சுதந்திர கட்சியுடன் பரந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நாட்டை ஸ்திரப்படுத்துவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி கொள்கை அறிக்கை ஒன்றினை தயாரிப்பதில் ஆரம்பத்தில் கவனம் செலுத்தும் என்றும் அதன் பின்னர் ஏனைய கட்சிகளின் நிலைப்பாடு குறித்து அறிய விரும்பும் என்றும் அவர் தெரிவித்தார்.



இதேவேளை ஆளும் கூட்டணியின் முக்கிய உறுப்பினர்களின் கடும் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும் ருவான் விஜேவரதன தெரிவித்தார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 450 |
| தக்காளி | 160 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 50 |
| கோவா | 160 | 230 | 250 |
| கரட் | 420 | 460 | 480 |
| பூசணி | 150 | 130 | 160 |
| புடோல் | 220 | 200 | 240 |
| வாழைக்காய் | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 120-250 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 450 | 450 | 400 |
| லீக்ஸ் | 220 | 260 | 280 |
| பீற்றூட் | 300 | 360 | 320 |
| கறிமிளகாய் | 500 | 580 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | -- |
| போஞ்சி | 400 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 320 |
| கீரை – 1 பிடி | 70 | 100 | 80 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 75 | 50-80 | 70-90 |
| இராசவள்ளி | 260 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 260 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையில் துவாரமிருந்தால் அதில் பணத்தை நிரப்பிப் பலனில்லை.
– ஜார்ஜ் எலியட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஊழ்வினைப் பயன் வந்துறுத்துகிறது!

எங்கள் ஈழத்தின் சித்தர் தவத்திரு யோகர் சுவாமிகள் மிகப்பெரும் ஞானி.

அவர் இயற்றிய அருட்பாடல்கள் நற்சிந்தனை என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளது.

தவிர, தவத்திரு யோகர் சுவாமிகளுக்கு இலங்கையில் மட்டுமன்றி உலக நாடுகளிலும் அடியவர்கள் இருந்தார்கள்.

அதிலும் சோல்பரி பிரபுவின் மகன் போதம் தவத்திரு யோகர் சுவாமிகளின் திருவடியைத் தஞ்சமெனத் தினந்தோறும் தொழுதேற்றியவர்.

அதேபோல் அமெரிக்க நாட்டவரான சுப்பிரமுனி சுவாமிகள் யோகர் சுவாமிகளின் அருளாசியுடன் அமெரிக்காவின் ஹாவாயில் ஆச்சிரமம் அமைத்து தவத்திரு யோகர் சுவாமிகளின் திருத்தொண்டை முன்னெடுத்தார்.

இவ்வாறாக எங்கள் மண்ணில் நடமாடிய ஞானகுருவாகிய யோகர் சுவாமிகள் இடையிடையே இந்தியாவுக்குச் சென்று வருவது வழக்கம்.

அவ்வாறு ஒருமுறை அவர் காசிக்குச் சென்றிருந்தவேளை, அங்கிருந்து தனது யாழ்ப்பாணத்து அன்பர்களுக்கு கடிதமொன்றை எழுதி அனுப்பியிருந்தார்.

அவர் எழுதிய அந்தக் கடிதம் நற்சிந்தனைப் புத்தகத்தின் இறுதிப்பகுதியில் சுவாமிகளின் கையெழுத்துப் பிரதியாக அச்சேற்றப்பட்டுள்ளது.

யோகர் சுவாமிகள் எழுதிய அந்தக் கடிதத்தை யாரேனும் தேடி எடுத்து வாசித்தால், எங்கள் தமிழினத்தின் கன்மவினைப் பயன் என்ன? என்பது தெரியவரும்.

ஆர்வமுடையவர்கள் சமய பேதம் பாராமல் யோகர் சுவாமிகள் எழுதிய அந்தக் கடிதத்தை நற்சிந்தனைப் புத்தகத்தில் இருந்து படித்து அறிந்து கொள்ள வேண்டும் என்பது நம் தயவான வேண்டுதல்.

இந்த வேண்டுதலை முன்வைப்பதன் காரணமாக, அக்கடிதத்தில் சுவாமிகள் எழுதிய விடயத்தை இங்கு நாம் கூறாமல் தவிர்த்துள்ளோம்.

இவைஒருபுறமிருக்க, ஊழ் என்ற அதிகாரத்தில் வள்ளுவப் பெருமான்

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்

எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆக, ஊழ்வினைப் பயன் ஈழத் தமிழ் இனத்தை வருத்துகிறது. வாட்டுகிறது என்பதை காலம் கடந்தேனும் நாம் உணர முடிகிறது.

ஆம், அன்று தொடக்கம் இன்றுவரை எங்கள் இனத்தில் ஏற்படாத ஒற்றுமை; எங்கள் மக்கள் செய்த மாபெரும் தியாகங்களையும் அர்த்தமற்றதாக்கிவிட்டது.

இப்போதுகூட எங்களிடம் ஒற்றுமை ஏற்படவில்லை. ஆளுக்கு ஆள் குற்றச்சாட்டு. ஆளுக்கு ஆள் வேறுபட்ட கொள்கை, கோட்பாடு. ஆளுக்கு ஆள் பொய்யுரை.

ஐயகோ! உறவுகளை இழந்த மக்களின் கவலை அவர்களோடு மட்டுமே.

கைதாகி நீண்டகாலம் சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளின் அவலம் அவர்களுக்கும் அவர் தம் உறவுகளுக்குமே.

இந்த நிஜத்தில் யாரை நம்புவது என்று தெரியாத அளவிலேயே எங்கள் தலைவிதி உள்ளது.

## திறமைகளை மேம்படுத்தி வாழ்க்கையில் முன்னேறுவது அதிகாரிகளின் கடமை

### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

திறமைகளை மேம்படுத்திக்கொண்டு, தொழில் வாழ்க்கையில் முன்னேறிச் செல்வதே இளம் அதிகாரிகளின் கடமையாகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கவில் அமைந்துள்ள இலங்கை விமானப்படை முகாமில் நேற்று முற்பகல் இடம்பெற்ற விமானப்படை அதிகாரிகளின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அறிவை மேம்படுத்திக்கொள்ள, தொடர்ச்சியான திறன்மேம்பாடு மற்றும் அனுபவத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு கடினமாக உழைக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

சுமார் 70 வருடங்களுக்கும் மேலாக விமானப்படையினரால் நாட்டுக்காகச் செய்யப்பட்ட சேவைகள் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல், தேசிய பாதுகாப்பை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கு வழங்கிய பங்களிப்புகளுக்கு ஜனாதிபதி தனது பாராட்டுக்களைக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## கண்டாவளை வைத்திய அதிகாரியை அச்சுறுத்தியவர் கைதாகி மறியலில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பொது வைத்திய அதிகாரியை அச்சுறுத்தியவர் கைதாகி எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச வைத்திய அதிகாரியை தொலைபேசியில் தொடர்புகொண்டு அச்சுறுத்தியதுடன் அவரது விடுதிக்கு வாகனத்தில் சென்ற சிலரும் அவரை அச்சுறுத்தியமை தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதுடன் இதற்கான விசாரணைகள் தர்மபுரம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த பிரதான சந்தேகநபரை கைது செய்ததுடன் தர்மபுரம் பொலிஸார் குறித்த சம்பவத்தின் போது கடமையிலிருந்த ஏனையவர்களிடமும் வாக்குமூலங்கள் பதிவு செய்தனர். மற்றும் சிசிரி கமரா ஒளிப்பதிவுகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. (ம)

## சாத்தியமான சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு ஒத்துழைப்போம்

### இந்திய உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)

வெற்றிகரமான தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள இந்தியா, சாத்தியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு ஒத்துழைப்புக்கள் வழங்கத் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் கோவிட் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்று முன்தினத்துடன் ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதோடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது. (ம)

## இராஜாங்க அமைச்சர் லசந்தவுக்கு கொரோனா

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது. அவருக்குத் தொற்று உறுதியானதையடுத்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த சில நாட்களாக இராஜாங்க அமைச்சருடன் நெருங்கிப் பழகியவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டில் இதுவரையில் 40க்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## அபிராமிப்பட்டர் விழா

சுழிபுரம் கம்பனை அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய அபிராமிப்பட்டர் விழா இன்று நடைபெறவுள்ளது.

மாலை 5.00 மணிக்கு விஷேட பூஜையும் அதனைத் தொடர்ந்து தேவாரபாராயணம், அபிராமி அந்தாதி ஓதுதல் நிகழும்.

இரவு 7.30 மணிக்கு மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் விசேட சாத்துப்படியுடனும் மங்கல வாத்திய சகிதம் அம்பாள் திருவீதி உலா வந்து அருள்பாலிப்பார். (ம)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ நீ என்னைக் கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புவோர் பேறு பெற்றோர்.

❖ என் தந்தை தம் அதிகாரத்தால் குறித்து வைத்துள்ள நேரங்களையும் காலங்களையும் அறிவது உங்களுக்கு உரியது அல்ல, ஆனால் தூய ஆவி உங்களிடம் வரும் போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்.

❖ இறுதி நாள்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன். உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர். உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும் உங்கள் முதியோர் கனவுகளையும் காண்பர்.

❖ அந்நாள்களில் உங்கள் பணியாளர் பணிப்பெண்கள் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன். அவர்களும் இறைவாக்கு உரைப்பர்.

❖ இன்னும் மேலே வானத்தில் அருஞ்செயல்களையும் கீழே வையகத்தில் இரத்தம், நெருப்பு, புகைப்படலம் ஆகிய அடையாளங்களையும் கொடுப்பேன்.

❖ ஒளிமயமான பெருநாளாகிய ஆண்டவரின் நாள் வருமுன்னே கதிரவன் இருண்டு போகும் நிலவோ இரத்த நிறமாக மாறும். அப்பொழுது ஆண்டவரின் திருப்பெயரைச் சொல்லி வேண்டுவோர் யாவரும் தப்பிப் பிழைப்பர்.

❖ நீங்கள் மனம் மாறுங்கள் உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள். ஏனென்றால் இந்த வாக்குறுதியானது உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் தொலைவிலுள்ள யாவருக்கும் ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி





## வீரகத்திப்பிள்ளை இராமநாதன்

(பூசகர் ஐயா)


பூர்வீக தர்மகர்த்தா - நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை

தனக்கென்று வாழாத தலைமகன்
தடம் பதித்து நடந்தாலும் தலைக்கனம் ஏதும் இல்லை
தலப்பணியில் அர்ப்பணிப்பில் தமை மிஞ்ச யாருமிலர்
அரவுத்தெய்வமே உறவாக கொண்ட உன்னத நாதன்
அண்டிவரும் பக்தர்க்கு ஆறுதல் அளிக்கும் உம்முகம்
பிறப்புக்கு அர்த்தம் போதும் நாதன் பொறுமையின் பொக்கிஷம்
உந்தன் உதிரத்தில் பலர் உயர இடம் கொடுத்த சிம்மாசனம்
பகுத்தறிவு இல்லாத மனித இனம் நாதன் பக்கம் விளையாட
பார்த்திருந்து அதற்கும் பக்குவம் சொல்லிகொடுத்த வித்தகன்
இன்று பல ஆத்மாக்கள் லஜித்து நிற்க பலவழிகள்கோலி
இன்னல் இல்லா பெருவாழ்வு எல்லோரும் வாழ வழிசமைத்தீர்
தசமியே திதியாக்கி சங்கரனை நாடிய இராமநாதன்
தசாப்தம் எத்தனையானாலும் மறையாது உந்தன் முகம்.
அரவுத்தெய்வமே ஆறுதல் கொடு அவர்தம் உறவுகட்கு.
அமைதிபெறுக ஆத்மா சாந்தி அடைக.
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

**அக்ஷய தர்மகூடம்**
**புளியம்பொக்கணை சந்தி, பெரியகுளம்.**

(C-3666)

# மரண அறிவித்தல்



## செல்லையா பஞ்சரட்ணம்

**தோற்றம் : 1943.05.14 மறைவு : 2022.01.29**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல. 326, திருநகர் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பஞ்சரட்ணம் அவர்கள் நேற்று (29.01.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - லட்சுமி தம்பதியரின் பாசமிகு புதல்வரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வநாயகி (ஓய்வுபெற்ற கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - முகாமையாளர்), காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் அன்புக் கணவரும் ஜெயரட்ணம் (சிவா), கௌரி, ராதா (ஆசிரியை - பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), கெங்கா, மகேஸ்வரன் (கனடா), சுயா, காலஞ்சென்ற புருசோத்தமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலைவாணி (ஆசிரியை - சிவபாத கலையகம் பாடசாலை), சிவசோதி (முன்னாள் குமரன் ஹாட்வெயர்), விமலநாதன் (முன்னாள் கரைச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - முகாமையாளர்), காலஞ்சென்ற சிவகுமாரன் (முன்னாள் குமரன் புடைவையகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நாகம்மா, சுப்பிரமணியம் செல்லம்மா மற்றும் இராசம்மா, சரஸ்வதி, செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கஜீபன் (மருத்துவ பீட மாணவன் - கொழும்பு பல்கலைக்கழகம்), கார்திகன் (K.M.V-மாணவன்), கனிநிலா (கிளி/புனித திரேச பெண்கள் கல்லூரி), டினோஷா (பயிலுனர் - மக்கள் வங்கி, கிளிநொச்சி), பவிதா (கிளி/ புனித திரேச பெண்கள் கல்லூரி), வினோதன் (K.M.V-மாணவன்), டினேஷ் (பொறியியல் தொழிநுட்ப பீடம் - யாழ். பல்கலைக்கழகம்), சுஜந்தன் (கிளி/ இந்துக் கல்லூரி), சோபனன் (கிளி/இந்து ஆரம்ப வித்தியாலயம்), பிருந்தா (முகாமைத்துவ பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), தர்சிகா (தொழிநுட்ப பீடம்-ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழகம்), ஆதீபன் (K.M.V-மாணவன்), ஆதித்தன் (AIA காப்புறுதி நிறுவனம்), நிஜிந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(9940)

இல. 326, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 மரணம்...

மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,400 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் மேலும் 982 பேர் கொரோனாத் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 609,047 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## நால்வர் பேராசி...

னர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவரும் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக நான்கு மூத்த விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த வர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின்படி, மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத் துறை மூத்த விரிவுரையாளர், மருத்துவ வல்லுநர் பி. குமரேந்திரன் சமுதாய மருத்துவத் துறை பேராசிரியராகவும் வணிக முகாமைத்துவ பீடத்தின் மனித வள முகாமைத்துவத் துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி என்.கெங்காதரன் மனித வள முகாமைத்துவ பேராசிரியராகவும் நிதி முகாமைத்துவத் துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி கே.லிங்கேசியா நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும் விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி ஆர். ஸ்ரீகரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ம-18,33,104)

## தமிழ்க் கட்சி...

நீதி அமைச்சின் ஏற்பாட்டில் நீதிக்கான அணுகல் எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று ஆரம்பமான பின்னர் தமிழ்க் கட்சிகள் இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியுள்ளமை தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவிற்கு கடிதம் அனுப்பலாம். அதனைவிட எங்களுடைய பிரச்சினைகளை எங்கள் நாட்டிலே தீர்த்துக் கொள்ள வேண்டும் அதுவே சிறந்தது.

அரசாங்கத்திலுள்ள ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாராளுமன்றத்தில் இப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதுதான் சிறந்தது.

இதற்காகத்தான் நாங்கள் ஒரு வாய்ப்பை உருவாக்க முயற்சிக்கின்றோம். ஜனாதிபதியுடன் தமிழ்க் கட்சிகள் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். விரைவில் இந்தச் சந்திப்பு இடம்பெறும்.

ஏற்கெனவே நாங்கள் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்காக ஆணைக்குழுவின் முன்பே அனைத்துக் கட்சிகளிடம் இருந்து ஆலோசனைகளைப் பெற்றுள்ளோம் என்றார். (ம)

## எதிர்ப்புத் தெரி...

நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நீதிக்கான அணுகல் எனும் தொனிப் பொருளிலான நடமாடும் சேவை நேற்றையதினம் யாழ்.மத்திய கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட குறித்த நிகழ்வு இன்றும் காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் நீதித் துறை சார்ந்த பல்வேறு அரச திணைக்களங்களில் பொதுமக்கள் சேவை பெறும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப் பட்ட "நீதிக்கான அணுகல்" எனும் தொனிப் பொருளிலான நடமாடும் சேவைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஒன்றுகூடி நீதி அமைச்சின் நடமாடும் செயலமர்வில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்[illegible] எனத் தெரி[illegible]

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பொலிஸார் தள்ளுமுள்ளில் ஈடுபட்டு அவர்களைத் தடுத்து நிறுத்தியமையால் அங்கு குழப்பமான நிலை ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-18,33,104)

## போராடி எதனை...

தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற நீதி அமைச்சின் நடமாடும் சேவையினை ஆரம்பித்து வைத்தபின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், காணாமலாக்கப்பட்டோர் நீண்ட காலமாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்றைய தினம் (நேற்று) யாழ்ப்பாணத்திலும் எமது நிகழ்வு நடக்கும் இடத்திற்கு முன்பும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். முல்லைத்தீவில் ஒரு நிகழ்வில் கலந்துகொண்டபோதும் நான் கலந்து கொண்ட நிகழ்வு முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களை நான் சந்திக்க அழைத்தேன். ஆனால் அவர்கள் சந்திக்க விரும்பவில்லை என்று கூறினார்கள்.

எனவே அதிலிருந்து ஒன்றை நான் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அவர்கள் போராட்டம் செய்யவே வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு பிரச்சினைக்குரிய தீர்வு தேவையில்லை. அவர்களுக்கு போராட்டத்தின் மூலம் தீர்வு கிடைக்காது.

கடந்த 13 வருடங்களாக போராட்டங்களை மேற்கொண்டு அவர்களுக்கு என்ன தான் கிடைத்தது? போராட்டங்களை மேற்கொள்வதன் மூலம் எதையும் அவர்கள் பெற்றுக் கொள்ள முடியாது. குறிப்பாக இயக்கங்களில் இருந்தவர்களின் உயிரை மீட்டுத் தருமாறு கூறினால் அதை பெற்றுக்கொடுக்க முடியாதுதானே? அதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால் இந்த காணாமலாக்கப்பட்டோருக்கான பிரச்சினைக்கு ஒரு தீர்வு வழங்க வேண்டும். அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் நான் ஒன்றை கூறி வைக்க விரும்புகின்றேன். நீதி அமைச்சர் என்ற ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டுமானால் அது அரசுடன் பேசித் தான் அதற்குரிய தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர போராட்டங்களை மேற்கொண்டு தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியாது. போராட்டங்களை மேற்கொள்வது அவர்களுடைய ஜனநாயக உரிமை அதனை மதிக்கின்றேன். அதனை தடுக்கமாட்டேன். ஆனால் போராட்டங்களை நடத்திஎதனையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றார். (ம-18,33,104)

## இரு பிள்ளை...

பேர்த் நகரில் பதிவாகியுள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறு தற்கொலை செய்துகொண்ட நபர் இலங்கையர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்திக்க குணதிலக்க (வயது - 40) என்ற நபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சம்பவத்தில் 4 வயதான மகளும் 6 வயதான மகனுமே கொலை செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

தன நிதானய
திகதி - 2022.01.29
சீட்டிழுப்பு இலக்கம் - 692
V 07 17 60 78

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 29.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2957
C 05 21 41 56

மஹஜன சம்பத
திகதி 2022/01/29
சீட்டிழுப்பு இலக்கம் 4662
D 5 5 8 2 2 1

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 003
மீனம் 02 08 17 20 மீனம்

மெகா பவர்
திகதி 29/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1010
A 08 32 61 62 74
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 02861

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1204
கன்னி 6 6 8 8 7 3

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1639 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 29.01.2022 தினம் சனிக்கிழமை
C 33 42 73 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 56,845,939/=

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.01.29
சீட்டிழுப்பு இல: 3800
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,534,740/-
வெற்றி இலக்கங்கள் 22 25 30 50 K

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=
திகதி 29.01.2022
வெற்றி வாரம் 3351
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 18 41 48 52 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,881,200/=

12 அதிர்ஷ்ட
சீட்டிழுப்பு வாரம் 815
2022.01.29 சனிக்கிழமை
X 23 01 41 42 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 208,366,201/-

සංවර්ධන වාසනාව
திகதி : 2022-01-29
வெற்றி வாரம் : 481 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 13,061,356/-
N 38 24 49 7
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,101,580/-
ரூ. 13,165,036/-

அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1463
சீட்டிழுப்பு திகதி: 2022.01.29
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,832,820/-
28 42 61 73 F

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவேற்பாளர்கள் தேவை

யாழ். நகர் மத்தியில் அமைந்துள்ள உல்லாச விடுதி ஒன்றில் கடமையாற்ற வரவேற்பாளர்கள் மற்றும் லேபர் தேவை.

**சிங்களம், ஆங்கிலம் பேச, எழுத தெரிந்திருக்க வேண்டும்.** (9902)

**077 634 1525**
**077 821 0122**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:-
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை**
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (9896)

**077 814 7389, 077 614 7333**

## பல் தேவைகளுக்கான நிலம் விற்பனைக்கு உள்ளது
### Multi Purpose Land for Sale

வவுனியா கொரவப்பொத்தான வீதியில் வவுனியாவிலிருந்து திருகோணமலை செல்லும் A29 பெரிய வீதியில் நகரத்துடன் இணைந்த 1 Km இனுள் இறம்பைக்குளம் பகுதியில் 105 அடி முகப்பு நீளமுடைய 10 1/2 பரப்பு விஸ்தீரணம் உடைய மேட்டுக்காணி விற்பனைக்கு உண்டு.
கல்யாண மண்டபங்கள், உல்லாச விடுதிகள் மற்றும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு ஏற்ற வகையில் முன் பார்வைக்கு அழகான Lake view, அமைதியான சுற்றுப்புறங்கள், வாகனத் தரிப்பிடங்களைக் கொண்ட, வற்றாத நல்ல குடிநீர் கொண்ட இடம் விற்பனைக்கு உண்டு.
பகுதிகளாகப் பிரித்தும் கொடுக்கப்படும். (9907)

**077 777 0035**
thanuraj@gmail.com

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு
# நினைவஞ்சலி



பிறப்பு 24 - 12 - 1926

இறப்பு 09 - 02 - 2021

அமரர்

## அப்பாத்துரை சாம்பசிவம்

திதி- 30.01.2022 திரயோதசி

கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதை விட்டகலாது. இன்று (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை எமது தந்தையாரின் முதலாவது ஆண்டு திதியை முன்னிட்டு கீரிமலையில் கிரியைகள் இடம்பெற்று மதியம் ஒரு மணியளவில் மதிய போசனமும் இடம்பெறவுள்ளது.

எனவே உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மகன் சா.ஜனகன் (கனடா) 0014165787584
மகள் ர.கௌதமி (ஜேர்மனி) 004915144938415
(9906)

## வேலையாட்கள் தேவை

K.K.S வீதி கொக்குவிலில் இயங்கும் தளபாடக் காட்சியறைக்கு பெண் வேலையாட்கள் தேவை. (9937)

தொடர்புகளுக்கு
**074 210 4820**

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்ய இலத்திரனியல் காட்சி அறைக்கு விற்பனையாளர் தேவை.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். (9938)

**077 704 3636**
**021 222 3530**

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களில் எமது நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு தரமானவர்கள் தேவை!

**விண்ணப்பிக்கக் கூடியவர்கள் :**
- 50 வயதிற்கு மேற்பட்ட MBA, BBA பட்டதாரிகள்.
- Security Service நிறுவனம் ஒன்றை வழிநடத்தக் கூடியவர்கள்.
- அரச, தனியார் வேலைகளில் இருந்து ஓய்வுபெற்ற உயர் அதிகாரிகள்.
- பொருளாதார பேராசிரியர்கள்.

**சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.**

### வாடகைக்கு வேண்டும்

சுன்னாகம், மல்லாகம், இணுவில், மானிப்பாய், உடுவில் பகுதிகளில் அலுவலகமாக பயன்படுத்த உகந்த வீடுகள் வேண்டும். (9857)

**+9477 795 0439**
**0041 79 334 4733**
**+9477 544 2370**

## ஆசிரியர்கள் தேவை

தெல்லிப்பளைச் சந்திக்கு அருகாமையில் ஆரம்பமாக இருக்கின்ற புதிய கல்வி நிலையம் ஒன்றிற்கு தரம் 6 - 11 வரை கணிதம், விஞ்ஞானம், தமிழ் உட்பட சகல பாடங்களும் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். (9880)

**077 834 3666**

## அகரம் உயர் நிலைக் கல்லூரி
### AHARAM HIGH STANDARD COLLEGE
### காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

**புதிய கல்வியாண்டு – 2022 ஆரம்பம்**

தரம் 06 – O/L
வரையான தமிழ் மொழி மூலம்
English medium வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(22.01.2022 இல் புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய தரம் 06 தமிழ்மொழி மூல English medium வகுப்புக்கள் ஆரம்பம்

04.02.2022 [வெள்ளிக்கிழமை]
வளர்பிறை விநாயக சதுர்த்தி அன்று காலை 6.35 – 8.05 வரையான சித்தயோக நன்நாளன்று

அனுமதிகளை 26.01.2022 மாலை 02 மணியில் இருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர் (9888)

## விரைவு பொதிகள் சேவை
# V2 TRAVELS
## UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3577)

**0768226240** DHL

## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS** (C-3667)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 20'000/-
பயிற்சியின்போது - 15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

## சிறுநீரகம் தேவை

35 வயதுடைய ஆண் ஒருவருக்கு O/A இரத்த வகையை உடைய சிறுநீரகம் தேவை. (9918)

**077 169 6329**
**076 213 5496**

## கணிதம்
### A.K. யசிந்தன்

தரம் 6 - O/L வரை
பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**TOP MATHS CENTER**
- சீனிவாசகம் வீதி
- தட்டாதெரு சந்தி

(9919)

- 077 188 2518

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00
Registered as a Newspaper in Srilanka
வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 329
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2053 30.01.2022 தொலைபேசி : 021 222 3378

# அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு



TRIPLE BLASTER இப்போது புதுப்பொலிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
TRC/D/PRO/21/09
Dialog எதிர்காலம் இன்றே.
(C-1613)

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## மருத்துவர்கள் சிலர் மீது பொதுமக்கள் குற்றச்சாட்டு



**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன இன்னமும் சாத்திரியாரைக் காணவில்லை. என்ன சங்கதியோ, மூப்பர் விசாரித்தார்.

இப்ப எல்லாருக்கும் காய்ச்சல், சளிதானே. சாத்திரியாருக்கும் அப்படித்தான் இருக்கும் கங்காணி கார்த்திகேசு ஊகித்தார்.

காய்ச்சல், சளி எண்டால் உடன வைத்தியசாலைக்குப் போகவேணுமல்லோ. விதானையார் விசுவலிங்கம் ஆலோசனை கூறினார்.

**சிறாப்பர்:** வைத்தியசாலைக்குப் போய் என்ன செய்யிறது.

காய்ச்சல், சளி எண்டால் டாக்குத்தர் கிட்டவும் வரமாட்டார்.

**விதானையார்:** அப்ப, தனிப்பட்ட மருத்துவர்களிட்டப் போறதுதானே.

**சிறாப்பர்:** தனிப்பட்ட வைத்தியசாலையோ. அங்க இன்னும் மோசம். காய்ச்சல், சளி என்றவுடனேயே ஏலவே கட்டி வைச்சிருக்கிற வெள்ளை, மஞ்சள், சிவப்பு நிறக் குளிசைகளைத் தந்துவிடுவினம்.

சிறாப்பர் இவ்வாறு கூறியதும் ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது.

எனினும் வாத்தியார் வைத்திலிங்கம் மட்டும் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். இதனை அவதானித்த பண்டிதர் பரமலிங்கம் என்ன வாத்தியார் கடுமையா யோசிக்கிறியள். ஏதேனும் சிக்கலோ.

**வாத்தியார்:** ஒரு சிக்கலும் இல்லை. எங்கட மருத்துவ சமூகத்தின்ர நிலைமையை நினைச்சுத்தான் யோசிக்கிறன்.

**பண்டிதர்:** ஏன்? என்ன? வாத்தியார் நடந்தது.

**வாத்தியார்:** எங்களிட்ட எத்தனையோ புனிதமான மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் இருக்கினம். ஆனால் ஒரு குறிப்பிட்ட மருத்துவர்களும் மருத்துவ நிபுணர்களும் மனிதநேயமற்றுச் செயற்படுவதாக மருத்துவ சமூகம் தொடர்பில பொதுமக்கள் மிகுந்த அதிருப்தி கொண்டிருக்கினம்.

அதிலும் சில மருத்துவ நிபுணர்கள் முழு நாளும் தனியார் வைத்தியசாலைகளிலேயே தங்கி இருப்பதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலையில அவையளைக் காணவே முடிவதில்லை எண்டும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லுகினம்.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுற விடயம் நானும் அறிஞ்சனான். மருத்துவ நிபுணர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை செய்யத்தான் வேணும். அதில எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

ஆனால், ஏழை நோயாளர்களையும் போதனா வைத்தியசாலையில பார்க்க வேணும். அதுதான் தர்மம். இதை விட்டிட்டு காசு...காசு... எண்டால் அந்தக் காசே வில்லங்கமாகப் போய்விடும்.

**கங்காணி:** இதை விட இன்னுமொரு பிரச்சினையும் இருக்குது. பொதுவில தனியார் வைத்தியசாலைகளில காசைக் கட்டி மருத்துவ நிபுணர்களிட்ட காட்டுகிற நோயாளர்கள் மருத்துவருக்காகக் காத்திருக்கிற நேரம் நான்கு, ஐந்து மணித்தியாலங்களாக இருக்குதாம். பொதுவில குறித்த தனியார் வைத்தியசாலை நிர்வாகம், மருத்துவ நிபுணர் வாற நேரத்தில இருந்து ஒன்றரை மணித்தியாலம் முன்னுக்காக நோயாளர்களை வரச் சொல்லுதாம்.

போதாக்குறைக்கு மருத்துவரும் ஒன்றரை மணித்தியாலம் பிந்தி வர மொத்தம் மூன்று மணித்தியாலம் சும்மா காத்திருக்க வேண்டி இருக்குது.

இனி, நம்பர் ஓடரில காட்ட இரண்டு மணித்தியாலம் எடுக்கும். ஆக, ஐந்து மணித்தியாலம் ஒரு நோயாளி காத்திருக்கிறதென்பது எந்த வகையில நியாயம் என்பதை எங்கட மருத்துவ சமூகம்தான் தீர்மானிக்க வேணும்.

**பண்டிதர்:** நான் அண்மையில கொழும்பில சனல் பண்ணிக் காட்டினனான். சொன்ன நேரத்திற்கு டாக்குத்தர் இருந்தவர். சிரித்தபடி மிகத் தெளிவான விளக்கம் சொன்னவர். மிகச் சந்தோசமாக இருந்தது.

**வாத்தியார்:** என்னவா இருந்தாலும் மருத்துவ சமூகத்தின்ர தர்மம் தான் இந்த மண் முழுவதும் பரவி பொதுமக்களையும் அது செழுமைப்படுத்தும்.

ஆகையால கடவுளுக்கு அடுத்தபடியாக மக்கள் போற்றுகின்ற மருத்துவர்கள் தர்மம்-அன்பு-இரக்கம்-கருணை கொண்டு செயலாற்ற வேணும்.

நோயாளர்களோட அவர்கள் அன்பாகப் பழகும் போது, அது அரைவாசி நோயைக் குணமாக்கிப்போடும். இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து சாத்திரியார் சதாசிவம் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**மூப்பர்:** இந்தா சாத்திரியாரும் வந்திட்டார். என்ன சங்கதி இண்டைக்கு லேட்டாப் போச்சுது.

**சாத்திரியார்:** என்ர பேரன் புலமைப் பரிசில் பரீட்சை எடுத்தவன்தானே. "ஸ்கீம்" வந்திட்டதெண்டு சொன்னாப் போல. நெற்றில எடுக்கிறதுக்கு ஓடித் திரிஞ்சன். அது சரிவரல்ல. அதுதான் லேட்டாப் போச்சுது.

**பண்டிதர்:** பகுதி ஒன்று வினாக்களில சில கேள்விகள் தெளிவில்லாமல் இருந்ததாகவும் பெரிய பெரிய கேள்விகளாக இருந்ததால பிள்ளைகள் பலரும் குழம்பிப் போயிற்றினமாம்.

சில கேள்விகளுக்கு என்ன விடை எண்டு ஆசிரியர்களைக் கேட்டால் அவர்களும் "ஸ்கீம்" வந்தால்தான் வெளிச்சம் எண்டு சொல்லுகினம்.

அப்ப ஐந்தாம் வகுப்பு மாணவர்களின்ர பரீட்சைகளிலேயே இப்படி நிலை எண்டால், அந்தச் சின்னஞ்சிறுசுகளின்ர மன நிலை எப்படியிருக்குமெண்டு பாருங்களன்.

பண்டிதர் இவ்வாறு கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு

# அரசின் பதில் என்ன?

2009 ஆம் ஆண்டு இந்த நாட்டில் போர் முற்றுப் பெற்று விட்டது. பயங்கரவாதம் பூண்டோடு அழிக்கப்பட்டு விட்டது என பேரினவாத அரசு அறிவித்திருந்தாலும் அது தமிழினத்தின் நிம்மதியான வாழ்விற்கு வழி வகுக்கவில்லை.

மாறாக 2009 இற்குப் பின்னர் தமிழினம் சந்தித்த உளரீதியான இன்னல்கள் ஏராளம்.

இறுதி யுத்தம், வன்னிப் பெரு நிலப்பரப்பு என்று கூறிக்கொண்டாலும் ஒரு சிறிய பகுதிக்குள் விடுதலைப் புலிகளை முடக்கிவிட்டோம் என்று கூறி அவர்களை அழிப்பதாய் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி உயிர்கள் மாண்டு போனதை எவரும் மறந்து விட முடியாது. வன்னியில் மனிதாபிமானப் போரே நடந்தது. அங்கு பொது மக்கள் கொல்லப்படவில்லை என அரசாங்கம் அறிவித்திருந்தாலும் அங்கு என்ன நடந்தது என்பதை இந்த உலகமே நன்கு அறிந்திருந்தது.

தனது மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுக்க தமிழினத்தினால் தொடுக்கப்பட்ட போராட்டம் 2009 உடன் மௌனிக்கப்பட்டதும் அதன்பின் முட்கம்பி வேலிக்குள் தமிழினம் பட்ட துன்பங்களை சாதாரணமாய் சொல்லி விட முடியாது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். போரை உடன் தடுத்து நிறுத்துங்கள் என உலக நாடுகளிடம் தமிழினம் கைகூப்பிக் கெஞ்சியது.

ஆனால் அங்கு நடந்ததோ வேறுவிதமானதாகவே இருந்தது.

தமிழ்த் திரைப்படங்களில் எல்லாம் முடிந்தவுடன் வரும் பொலிஸாரைப் போல வன்னியில் அப்பாவி பொது மக்களை முழுவதுமாய் கொன்றொழித்த பின்னர் அங்கு போர்க் குற்றம் நடைபெற்றது என சர்வதேசம் கூறுவது வேடிக்கையானது.

ஆனாலும் தமக்கான நீதி கிடைத்தே ஆக வேண்டும் என்பதில் தமிழினம் உறுதியாய் நிற்கின்றது.

வன்னிப் பெரும் போரில் தமது பிள்ளைகளை படையினரிடம் ஒப்படைத்துவிட்டு இன்று வருவான், நாளை வருவான், என்றோ ஒரு நாள் வந்தே தீருவான் என்று ஏங்கித் தவிக்கும் பெற்றோரின் நிலையினை எவரும் எண்ணிப் பார்ப்பதே இல்லை.

தமது காணாமல் போன பிள்ளைகளைத் தேடி அலைந்த எத்தனை பெற்றோர் அந்த ஏக்கத்துடனேயே இறந்து போய் விட்டனர்.

வடக்கில் 1000 நாட்களைக் கடந்தும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் சுழற்சி முறையிலான போராட்டம் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டே இருக்கிறது.

அந்தப் போராட்ட தளத்தைத் தாண்டி எத்தனை முறை எத்தனை அரசியல் தலைவர்கள் சென்றிருப்பார்கள்.

ஆனால் ஒரு நாள் கூட அவர்கள் நிலை உணர்ந்து அவர்களுக்கான தீர்வினைப் பெற்றுத்தர முன்வரவே இல்லை.

மாறாக வன்னியில் காணாமல் போன உறவுகளை மண்ணுக்குள் தோண்டிப் பாருங்கள் என வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கின்றனர் பெரும்பான்மை ஆட்சியாளர்கள்.

தமிழர் என்றாலே பயங்கரவாதிகள் என்ற பார்வையைத் தவிர்த்து அவர்களும் மனிதர்களே எனும் கரிசனையுடன் பார்த்தால் அவர்களின் வலி புரியும்.

> இழப்பு என்பதை இழந்தால் மாத்திரமே புரிந்து கொள்ள முடியும். இதையே இராமாயணத்தில் தசரதன் தன் மகன் இராமனை இழந்து தவித்து உயிர் விடுவதையும், மனுநீதி கண்ட சோழன் பசுவிற்கு நீதி வழுங்க தன் மகனையே தன் தேர்ச் சில்லில் இட்டு கொலை செய்து புத்திர சோகத்தில் வாடுவதையும் எடுத்துக் காட்டி நிற்கின்றது.



காணாமல் போன தமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனும் பதிலைக் கேட்கும் அவர்களுக்கு இழப்பீடு தருகின்றோம் எனும் அரசின் அறிவிப்பு எப்பேர்ப்பட்ட வேதனையைத் தரும் என்பதை பட்டால் மாத்திரமே புரியும்.

பிறப்பு உண்டேல் இறப்பு நிச்சயம் என்பது நியதி. ஆனால் தமது பிள்ளைகளை எமது கையால் பிடித்து படையினரிடம் ஒப்படைத்தோம்.

அவர்களுக்கு எதுவும் ஆகிவிடாது என்ற நம்பிக்கையிலேயே அவர்களை கையளித்தோம். இன்று அவர்கள் இல்லை என்றால் எப்படி ஏற்க முடியும் என்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் விம்மலை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

தற்போது வடக்கிற்கு விஜயம் செய்துள்ள நீதி அமைச்சர் அலி சப்ரியின் வழிகாட்டலில் "நீதிக்கான அணுகல்" எனும் தொனிப் பொருளில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கும் நடமாடும் சேவை வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை வவுனியா மாவட்டச் செயலகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளுக்கான நடமாடும் சேவை ஆரம்பமானது.

இந்நிகழ்வை முற்று முழுதாக புறக்கணித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அந் நடமாடும் சேவைக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

"நீதி அமைச்சினால் நீதி கிடைப்பதில்லை", "கால அவகாசம் வேண்டாம் நீதிதான் வேண்டும்", "காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளே வேண்டும் இழப்பீடு வேண்டாம்" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் வவுனியா மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட முற்பட்டதும் பொலிஸாரினால் அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டதும் ஊடகங்களில் வெளியாகியிருந்த விடயம்.

தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இந்நடமாடும் சேவையை எதிர்த்து உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் குறித்த அமர்வில் நான்கு பேர் மாத்திரம் பங்கு கொண்டிருந்தனர்.

அவர்களும் எமக்கு எந்தவித இழப்பும் தேவையில்லை. காணாமல் போன எமது உறவுகளுக்கு என்ன ஆனது என்ற தீர்வு மட்டுமே வேண்டும் என மிகத் தெளிவாகக் கூறியிருந்தனர்.


அரசின் மீது- நீதி அமைச்சின் மீது நம்பிக்கை இழந்த உறவுகள் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கேட்கும் உரிமை இன்றுவரை மறுக்கப்படுவது ஜனநாயக நாட்டிற்கு அவ்வளவு நல்லதல்ல.

இழப்பு என்பதை இழந்தால் மாத்திரமே புரிந்து கொள்ள முடியும்.


இதையே இராமாயணத்தில் தசரதன் தன் மகன் இராமனை இழந்து தவித்து உயிர் விடுவதையும், மனுநீதி கண்ட சோழன் பசுவிற்கு நீதி வழங்க தன் மகனை தன் தேர்ச் சில்லில் இட்டு கொலை செய்து புத்திர சோகத்தில் வாடுவதையும் எடுத்துக் காட்டி நிற்கின்றது.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வில் முன்னேற ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள் மாமா?

**கணபதிதாசன் — கட்டைக்காடு**

**தமிழ் தரப்புக்களின் முயற்சியினால் தமிழர் நிலை உயருமா?**

இந்த ஒற்றுமையைத் தான் தமிழ் மக்கள் இவர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறார்கள். தமிழினத்திற்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் இவர்கள் உறுதியாய் இருப்பது போலத் தெரிகிறது.
நிச்சயம் இந்த கூட்டு சுயநல அரசியல் தவிர்த்ததாய், அது முழுக்க தமிழினத்துக் கானதாய் இருக்குமாயின் நிச்சயம் தமிழினத்திற்கான நீதி கிடைத்தே தீரும்.
நாலு மாடு நேரே ஓடினால் ஒரு மாடு குறுக்கே இழுக்கத்தான் செய்யும். ஆனாலும் குறுக்கே இழுக்கும் மாடுகளை மற்றைய மாடுகள் பின் தொடர்வதில்லை என்பது உண்மையானது.

**மதுவன் — மீசாலை**

**சின்னத்திரை தொடர் நாடகங்களில் பெண்களின் ஆதிக்கம் பற்றி கூறுங்கள் வியாசரே?**

சமூகங்களில் முளைத்துக் கிடக்கும் மூடவேர்கள் இந்த தொலைக்காட்சித் தொடர்கள். இப்போதைய சமூகத்தில் குடும்பத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு இந்த தொடர் நாடகங்களின் வகிபாகம் அதிகம் உண்டு. பழிவாங்குவதை மட்டும் கருப்பொருளாகக் கொண்டு எடுக்கப்படும் இவ்வாறான தொடர்களைத் தொடர்ந்து பார்க்கப் பார்க்க அவர்களையே அறியாமல் அந்த வக்கிர புத்தி அவர்களிடத்தில் ஒட்டிக் கொண்டு விட்டது. அதிலும் மாமி-மருமகள் சண்டை என்பதை சொல்லவே தேவையில்லை.
உண்மையில் மாமி-மருமகள் உறவென்பது எப்பேர்ப்பட்ட உறவென்பதை தெரிந்து கொள்ளாத சமூகம் ஒன்றை உருவாக்கிய பெருமை இந்த சீரியல் நாடகங்களையே சாரும்.

**சுதன் — குப்பிழான்**

**சூடுகண்ட கூட்டமைப்பு மீண்டும் அடுப்பங்கரையை நாடுமா வியாசரே?**

சூடுகண்ட பூனை மீண்டும் அடுப்பங்கரையை நாடாது தான். ஆனால் அடுப்பங்கரையில் கருவாட்டுத் துண்டைக் கௌவிய பூனைக்கு சூடென்ன சுறணையென்ன.
கருவாட்டுத் துண்டு தான் கிடைக்குதே என்று சூட்டைத் தாங்கிக் கொண்டு கருவாட்டைக் கடிக்க வேண்டியது தான்.
சரி அதில் சிறு முள்ளையாவது தமிழினத்துக்குத் தருவார்கள் என்று எதிர்பார்க்கும் எம்மை செருப்பால் அடிப்பதை விட வேறு எதைச் செய்து விட முடியும்.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**தனு — மந்துவில்**

**ஏதாவது ஜோக் ஒன்று சொல்லுங்களேன் மாமா?**

அது முதலைகள் நிறைந்த குளம். முதலைகளைப் பார்க்க உல்லாசப் பயணிகள் வெகுவாகக் கூடி இருந்தனர்.
அங்கு நின்ற கோடீஸ்வரர் ஒருவர் இந்த முதலைகள் நிறைந்த குளத்தை யார் நீந்திக் கடக்கின்றனரோ அவர்களுக்கு ஒரு இலட்சம் பரிசாகத் தருவேன்.
ஒரு வேளை அவர் முதலைகளுக்கு இரையாகி இறந்தால் அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் வழங்குவேன் என்று கூறியது தான் தாமதம் ஒருவர் மிக வேகமாக இந்த ஆபத்து மிகுந்த முதலைக் குளத்தை நீந்திக் கடக்கத் தொடங்கினார்.
மின்னல் வேகத்தில் மறுகரைக்கு வந்த அவரை அங்கு நின்றவர்கள் கைதட்டி பாராட்டினர்.
ஆனால் அவரோ பதற்றத்துடன் தன் மனைவிக்கு அருகில் வந்து 'திடீரென்று என்னைக் குளத்திற்குள் தள்ளிவிட்டீரே ஒரு வேளை நான் இறந்திருந்தால்...' என்றார் பதற்றத்துடன் மனைவியைப் பார்த்து.
அதற்கு மனைவி சொன்னார் அப்போதும் எனக்கு இரண்டு இலட்சம் கிடைத்திருக்கும் என.



சின்னத்திரை தொடர் நாடகங்களில் பெண்களின் ஆதிக்கம் பற்றி கூறுங்கள் வியாசரே?

**திவ்வியா — யாழ்ப்பாணம்**

**வாழ்வில் முன்னேற ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள் மாமா?**

அல்லையூர் விவசாயி என்ற அடைமொழியுடன் கிரிசன் என்ற இளம் விவசாயியை திருநெல்வேலி சந்தை முகப்பில் சந்திக்கலாம்.
மருத்துவகுணம் நிறைந்த இலைக் கஞ்சியை வாடிக்கையாளர்களுக்கு மிகவும் குறைந்த விலையில் வழங்கிக் கொண்டிருக்கிறார்.
முருங்கை இலை, கறிவேப்பிலை, கற்பூரவள்ளி, வல்லாரை, சிவப்பு பசளி, கரிசலாங்கண்ணி, முடக்கொத்தான், தூதுவளை, மொசுமொசுக்கை போன்ற கிடைப்பதற்கரிய மூலிகைகளைச் சேர்த்து இயற்கையான முறையில் நஞ்சற்ற பானமாய் தருகிறார் அவ் இளைஞர்.
நஞ்சற்ற விவசாயத்தை இயற்கை முறையில் மேற்கொண்டு வெற்றி கண்டிருக்கிறார். இன்றும் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கிறார். ஒருமுறை இவரை சந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு நல்ல உத்வேகம் வரும்.

**பாலசுந்தரம் — அம்பன்**

**காகத்தின் கூட்டில் குயில் முட்டை இடுவது எதைப் போன்றது வியாசரே**

காகத்தின் கூட்டில் குயில்கள் முட்டை இட்டு தன் குலத்தைப் பெருக்கினாலும் ஒரு நாளும் காகக் கூட்டை தன் கூடு என்று குயில்கள் சொன்னதில்லை.
ஆனால் எம் நாட்டில் யார் காகம் யார் குயில் என்று தெரியாமல் இன்று பெரிய தம்பட்டம் அடிப்பதே நடந்து கொண்டிருக்கிறது.
பேராசை பிடித்தவனுக்கு எதைக் கண்டாலும் அது தனது என்ற எண்ணம் என்றும் விட்டுப் போகாது. அதன் முடிவு யமன் எருமை மாட்டில் வரும் போது அந்த எருமை மாடு எனக்கானது என்ற பேராசை வரும்.
பிறகென்ன சென்று வா தம்பி என்று வழியனுப்ப வேண்டியதுதான்.

**தாரா — வதிரி**

**தெருவோரங்களில் குப்பைகளைக் கொட்டுபவர்களைப் பற்றிக் கூறுங்கள் மாமா?**

அன்பார்ந்த குப்பை கொட்டும் குப்பைகளே! உங்கள் வீட்டுக் குப்பைகளை வீதியில் கொட்டுவது சரியானதா? என்பதை உங்கள் மனச்சாட்சியைத் தொட்டு கேட்டுப் பாருங்கள்.
உங்கள் வீடு குப்பை இன்றி அழகாக சுத்தமாக இருக்க வேண்டும். ஆனால் உங்கள் வீதி அசிங்கமாக இருக்கலாம் என்ற நினைப்பு எப்பேர்ப்பட்டது.
உங்கள் வீட்டுக் குப்பையை வீதியில் போடுவதென்பது உங்கள் சுய கௌரவத்திற்கு பாதிப்பில்லை என நீங்கள் நினைக்கலாம். ஆனால் குப்பை கொட்டியது நீங்கள் தான் என்பதை மற்றவர்கள் அறியும் போது அந்தக் குப்பையிலும் கேவலமாக உங்களைப் பார்ப்பார்கள். அதை உணர்ந்து கொண்டால் சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்குக் கயிறு



பல பேர் பல தேவைகளுக்கு
பயன்படுத்துவது கயிறாகுமே
பல பேரின் உயிர்களை பறித்துள்ளதே
இளையோர் தொடக்கம் முதியவர் வரையாகுமே
தூக்கு கயிறு உயிரை எடுக்கிறதே

இதற்கோர் முடிவுதான் இல்லையோ
குற்றம் இழைத்தவன் தூக்குக் கயிற்றில் தொங்கிறானே
சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டியவனே
மனித உயிரை மதிக்காத செயல் அல்லவா

கடவுள் தந்த வாழ்வை
மனிதன் அழிக்கிறானே
வரும் துன்பங்களுக்கு தீர்வு இல்லையா
வாழ்க்கையில் துன்பங்கள் துயரங்கள் சகஜமே

இது எந்த வகையில் நியாயப்படுத்திட முடியுமோ
வாழத் தெரியாதவர்கள் வாழ்க்கையை அழிப்பதா
கயிறை எடுக்கும் போது ஒரு கணம் சிந்திக்கலாமே
தூக்குக் கயிறு தீரவைத் தரும் கயிறாகிடுமா

பெ.தனா
தெல்லிப்பழை.

## மன்னனும் மணிமுடியும்

சைராக் மன்னன்
மணிமுடி செய்ய
பொன்னைக்கொடுத்தாரே
பொற்கொல்லன் பெற்ற
சிலநாளில் அழகான
மணிமுடி செய்தானே

மணி முடி பெற்ற
மன்னன் முடியை
நோட்டம் விட்டாரே
முடியில் கலப்படம்
இருப்பதை உணர்ந்து
கலக்கம் கொண்டாரே

ஆக்கிமி டீசெனும்
அறிவுடை நபரை
மன்னன் அழைத்தானே
அரசனின் குழப்பம்
தீர்ந்திட அவனும்
சிந்தித் திருந்தானே

தொட்டி நிரம்பிய
நீருள் அமிழ்ந்து
அவனும் குளிக்கையிலே
தொட்டியின் பகுதி
நீரும் வெளியே
சென்றதை உணர்ந்தாரே

உடலுக்குச் சமனான
நீர்தான் வெளியே
சென்றதைக் கண்டதுமே
"உரேக்கா" என்றே
சத்தம் செய்து
வீதியில் ஓடினாரே


எந்தப் பொருளும்
நீரில் அமிழ்கையில்
பொருளுக்கு சமனான
நீரைப் பெயர்த்திடும்
தத்துவம் உணர்ந்து
மகிழ்ச்சி கொண்டாரே

மன்னன் சபையினில்
மணிமுடி பெற்று
நீருள் அமிழ்த்தியதும்
முடிக்குச் சமனான
நீரிலும் கூடிய
அளவைக் காட்டினாரே

மன்னன் கொடுத்த
பொன்னில் மட்டும்
முடியைச் செய்திட்டால்
சின்னா பின்னமாய்
முடியும் உடையும்
உண்மையை உணர்த்தினாரே

எஸ்.சிவானந்தராஜா
பண்டத்தரிப்பு

## அவள்தானே தாய்



மலர் தந்தது ஒரு கொடியோ!
மனம் மகிழ அதன் நெடியோ!
மலரே நீ மலர்ந்தது
நிறம் தரவா? மணம் தரவா?
உலரும் என்றதால் மலரே
உலகம் மறந்ததா உன்னை
வாழும் உலகிலே என் சோதரி
நாளும் அணிவாள் மலரே
நீ பார்த்து அவர் சிரித்தாள்
அவள் பார்க்காது போனால்
நான் அழுவேன்
அன்னையின் பின் அவள்
தானே தாய்
உலகம் செய்யும் வினையால்
உராதே என் மலரே
திலகம் கொண்ட நில்வே
தினமும் வாடதே

ஆறுமுகம் சிவபாதம்
இணுவில்.

## மௌனத்தின் தேடல்- 547



## இறைக்கு இடுகை

ஏழைக்கிடுவதே
இறைக்கு இடுகை
கொடுப்பது புகழுக்கா
கூழைக்கையது
பிறப்பின் நோக்கம்
தெளிந்தால் இட்டு
உண்டு வாழ்வதே நீதி

சிவமணி
நல்லூர்.

## மௌனத்தின் தேடல்- 548



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
ஏனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## இது சித்தன் போக்கா? அல்லது சிவன் போக்கா?

ஓடியாடி உலவிய தேகம் வாடி மிகவும் மலிந்திட்ட
சோகம் மலர்ந்து மணம்வீசிய இளமை தேய்ந்து
உலர்ந்து ஓர் மூலையில் ஒய்ந்து இது கையேந்தும்
நிலையா அல்லது கையறு நிலையா?
பாவை ரதிபோலப் பாடினார் புலவன்
"இனியொரு விதி செய்வோம்
தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில்
செகத்தினை அழித்திடுவோம்"
அருவராகொருகை வெண்டலையேந்திய எங்கள்
பெருமானும் ஒரு பிச்சா மூர்த்திதானே;

வாணியழகன்,
முரசுமோட்டை.

## பிச்சை இடுவோம்

வீதியில் இரந்து பிச்சை
கேட்கும் இயலாத முதியவரே!
மனதில் கருணையோடு
நாம் உனக்குப் பிச்சையிட்டு
புண்ணியம் செய்வோம்
அதனால் இறந்த பின்பு நமக்கு
சொர்க்கத்தில் நிச்சயம்
இடமுண்டு.

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

## பிரார்த்தனை

யுத்தம் அற்ற பூமி வேண்டும்
உணவு பஞ்சம் நீங்க வேண்டும்
கொடிய கொரோனா நோய்
ஒழிய வேண்டும்
சுத்தமான சூழல் வேண்டும்
ஊழல் அற்ற உலகம் வேண்டும்
ஊரார் கூடி வாழ வேண்டும்
சுகமாய் வாழ இத்தனையும்
வேண்டுகிறேன்
அருள் புரியாயோ
எம் பெருமானே

கும்பவாழியான்
உடுப்பிட்டி.

## உண்மையும் மாயையும்

மாயை சினிமா திரையில்
மிக ஏழைபோல நடிக்கும் நடிகன்
தன் பசி தீர்க்க கையேந்தும்
காட்சியை காணும் சினிமா
பித்தர்கள் கண்ணீர் விட்டாலும்
ஆச்சரியமில்லை!
உண்மை எனும் உலக காட்சி
திரையில் ஏழை பசிக்கு கை
ஏந்தும் நிலை கண்டும் காணாத
நிலையில் சுயநலவாத பித்தர்கள்
இங்கும் அங்கும் எங்கும்.

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்.

## இராஜராஜேஸ்வரி

உறவுகள் சொந்தங்களை (ஐ) விட்டு
ஒதுங்கி பணம், பதவி, புகழ் தேடும் தாயே!
உன் தரிசனம்
என் பந்தமாக தொடர
பொருள் தேடும் உலகிலே
அருள் தேடும் நெஞ்சமே!

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்.

## ஏழையின் உண்டிக்கு

வான் பார்த்த பூமிக்கு
மழை கிடைக்கும்
தேன் பிலிற்றும் மலரும்
இனம் பெருக்கும்
எனினும் ஏழையின்
உண்டிக்கு இயற்கை
[illegible]
[illegible]

தவசாமி-தாவடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**சாப்பாட்டு மண்டபத்தில் மாத்திரமல்லாமல், எங்கு சண்டை நடந்தாலும் சில நிமிட நேரத்துக்கு, முகாமில் நடமாட்டங்கள் தடைப்படும். காம்பவுண்டுகளுக்கு இடையிலான இரும்புக் கதவுகள் இழுத்து மூடப்படும். கட்டுப்பாட்டு அறையிலிருந்து உத்தியோகத்தர்களுக்கான அறிவிப்புகள் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டபடியிருக்கும்.**

## வலி சொல்லும் தொடர்... 18

ஜூனியர் விகடன்



ஒரு சாப்பாட்டு கூடத்தில் தன்னோடு இவ்வாறு நடந்து கொள்வான் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

ஒரு நொடியில் கமரனின் கண்களுக்கு முன்னால் நட்சத்திரங்கள் பறந்தன. ரஹீம் நிறுத்தவில்லை. காலியாகவிருந்த பிளாஸ்டிக் கதிரையொன்றை எடுத்து கமரனை நோக்கி எறிந்தான். அதற்கு மேல் நிதானிக்க முடியாமல், கமரன் பின்பக்கமாக சாப்பாட்டின் மீது சரிந்து விழுந்தான்.

ஓடிவந்த, இரண்டு உத்தியோகத்தர்கள், ரஹீமைப் பின்பக்கமாகப் பிடித்து, தரையில் குப்புறப்போட்டார்கள். கைகளை மடக்கி வெளியில் இழுத்துப் போனார்கள்.

பசியோடு வந்திருந்தவர்கள் பதகளித்துப் போனார்கள். சிதறியோடினார்கள். பெண்கள், குழந்தைகள் குழறினார்கள். சிலர் சாப்பாட்டையும் தூக்கிக்கொண்டு வெளியே ஓடினார்கள். சிலர் ஓடும் போது விழுந்தார்கள். கதிரைகள் இடறியும் சிலர் புரண்டு எழுந்தார்கள்.

அமீராவின் கன்னத்தில் ரத்தம் வடிந்தது.

சாப்பாட்டு மண்டபத்தில் மாத்திரமல்லாமல், எங்கு சண்டை நடந்தாலும் சில நிமிட நேரத்துக்கு முகாமில் நடமாட்டங்கள் தடைப்படும். காம்பவுண்டுகளுக்கு இடையிலான இரும்புக் கதவுகள் இழுத்து மூடப்படும். கட்டுப்பாட்டு அறையிலிருந்து உத்தியோகத்தர்களுக்கான அறிவிப்புகள் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டபடியிருக்கும்.

குழப்பவாதிகளைத் தனிமைப்படுத்தி இழுத்துச் சென்ற பிறகு, நிலைமை வழமைக்குத் திரும்பிவிடும். கலவரத்தில் காயமானவர்களுக்கு துரிதமாக மருந்து போடுவர். நிலைமை மோசமென்றால், அம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பிவிடுவர்.

தஞ்சத்துக்கு ஓடி வந்த தேசத்தில், ஊர்க்குணம், போர்க்குணம் என்று எதையாவது காட்டுவதற்கு அவசரப்பட்டு, கடைசியில் அது விசாவுக்கு வில்லங்கமாகி விடக்கூடாது என்பதில் அநேக அகதிகள் நிலைமைகளை நிதானமாகத் தான் கையாண்டார்கள். அந்தப் புரிதல் அர்த்தமானதும் கூட. ஆனால், இயல்பிலேயே தங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியாதவர்களுக்கு, முகாம் வாழ்க்கை உள்ளும் புறமும் கையாள முடியாத கரைச்சலாகவே இருந்தது.

அன்றைய சம்பவத்துக்குப் பிறகு, ரஹீமுக்கு சாப்பாட்டு மண்டபப் பக்கம் போவதற்கு இரண்டு வாரம் தடை விதித்தது குடிவரவு அமைச்சு அலுவலகம். முகாமில் அவன் செய்த குற்றச் செயல்கள் என்று பெயரிடப்பட்ட தனிக்கோப்பில், அன்றைய சம்பவமும் இணைந்து கொண்டது.

குடிவரவு அமைச்சு அலுவலகத்தின் சிறப்பு அங்கீகாரத்துக்கு அமைய, முகாம் நிர்வாகம் இந்த அனுமதியை வழங்கியிருந்தது.

சைவ முறைப்படி, எட்டுச்செலவு சடங்கைச் செய்வதற்கு குடிவரவு அமைச்சின் அலுவலகம் ஐயர் ஒருவரை வரவழைப்பதற்கும் ஏற்பாடு செய்திருந்தது.

சடங்கு செய்வதற்கு வந்த ஐயரின் குத்துவிளக்கு, எண்ணெய், கற்பூரம், தீப்பெட்டி முதற்கொண்டு, பூணூல் வரைக்கும் அனைத்தையும் முகாம் வாசலில் உத்தியோகத்தர்கள் சோதனையிட்டனர்.

முகாமிலுள்ள வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள், தங்களது சமய அனுட்டான நிகழ்வுகளுக்கு, மதகுருமார்களை அழைக்க வேண்டும் என்ற பெயரில், அவர்களின் ஊடாக சாராய போத்தல்களை உள்ளே கொண்டு வந்தது அவ்வப்போது கண்டுபிடிக்கப்பட்டது. வழக்கம். முகாம் அகதிகளுக்கென்று வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட பெரியதொரு 'கட்லட்' பாத்திரத்துக்குள், அண்மையில் மூன்று ஹசிவாஸ் றீகல்' போத்தல்கள் மீட்கப்பட்டு, குறிப்பிட்ட மதகுருவின் உதவியாளர் முகாம் பக்கம் வருவதற்கு நிரந்தரமாகத் தடை செய்யப்பட்டிருந்தார்.

முகாமிலிருந்த பர்மா பெண்ணொருத்தி தனது தலைமுடி வேகமாக உதிர்வதாக முறையிட்டு, வெளியிலிருந்து சிறப்புரக, தலை கழுவும் சம்பூவை தனது உறவினர் வாங்கித் தருவதாகக் கூறியிருந்தாள். குடிவரவு அமைச்சின் அலுவலகமும் அதற்கு சுகாதார ரீதியான கோரிக்கை என்று அனுமதி வழங்கியிருந்தது.

ஒரு லீற்றர் சம்பூ போத்தலுடன் வந் தவரிடம், போத்தலை வாங்கி சோதனை போட்டதில் புத்தம் புதிய சம்பூவை முழுதாக ஊற்றி விட்டு, நன்றாகக் கழுவி சுத்தம் செய்து, அதற்குள் 'பிளாக் லேபல்' சாராயத்தை ஊற்றிக்கொண்டு வந்தது பிடிபட்டது.

ஒரு இறாத்தல் பாணுக்குள் சிறிய 'ஜிம் பீம்' போத்தலை ஒளித்து முகாமுக்குள் கொண்டு வர முயன்ற, ஆப்கன் மூதாட்டி ஒருவரிடம், ' இது என்ன?' என்று கேட்டபோது, 'உங்களையெல்லாம், அல்லாஹ் மன்னிக்கவே மாட்டார்' என்று அந்த மூதாட்டி சபித்து விட்டுப் போனார்.

சோதனை செய்த அதிகாரிகள் திகைத்துப் போனார்கள். அவர்களைப் பார்க்க வருகிற வெளியாட்கள் சிலருக்கும் மிகப்பெரிய சவாலாகத் தொடர்ந்தது. ஆதை எப்படியாவது வாசலில் வைத்துப் பிடித்து விட வேண்டும் என்பது எங்களது முழு முயற்சியாக இருந்து கொண்டேயிருந்தது.

மெல்பேர்னிலிருந்த குறைந்த பாதுகாப்புடைய முகாம் இது என்ற காரணத்தால், இங்கு வாசலில் ஒவ்வொருவருக்கும் அலாரம் கூவும், தானியங்கிச் சோதனைக் கருவிகள் இல்லை. சந்தேகப்பட்டால், ஆட்களை மறித்து, உள்ளே கொண்டு போகும் பொருட்களைக் காண்பிக்கக் கோரும் அதிகாரத்தை மாத்திரம் தான் குடிவரவு அமைச்சு அலுவலம் வழங்கியிருந்தது. இந்த முகாமில், குடும்பங்களும் சிறுவர்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்த காரணத்தால் இங்குள்ள நிர்வாகத்தில் குடிவரவு அமைச்சின் மென்மையான பார்வையே எப்போதும் படர்ந்திருந்தது.

சிலவேளைகளில், சில அப்பாவி விருந்தினர்கள் மிகக் கொடூரமான வகையில், வாசலில் விரித்து வைத்திருக்கும் - சந்தேக வலையில் விழுந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களைக் குற்றமற்றவர்கள் என்று நிரூபிப்பதில் பெரும்பாடு பட்டிருக்கிறார்கள்.

ஐந்து பெண் குழந்தைகளுக்குத் தகப்பன், கடற்றொழில் தான் தவமென்று வாழ்ந்து வளர்ந்தவர். வன்னிக்குள் தவழ்ந்து வந்த போரினால், அங்கிருந்தே கடல் வழியாக நேரடியாக தனியாக அவுஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்தவர்.

குடி வரவு அமைச்சின் அதிகாரிகள் உட்பட அவுஸ்திரேலிய புலனாய்வுத் துறையினர் அத்தனை பேரின் முன்னிலையிலும் கற்பூரத்தில் அடித்து சத்தியம் பண்ணாதது தான் குறை. ஆனால் இவர்தான் முன்லைத்தீவிலிருந்து ஐம்பத்தாறு அகதிகளையும் அவுஸ்திரிரேலியாவுக்கு அழைத்து வந்தார் என்று அவுஸ்திரேலியத் தரப்பிரனர் உறுதியாக நம்பினார்கள்.

(அடுத்த வாரம் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா




அவர்கள் கலவரத்தையோ, எதிர்நோக்கியிருந்த ஆபத்தையோ, சிறிதளவும் பொருட்படுத்தாமல், கப்பலின் நூலேணி மூலம் படகிலிறங்கி அதில் இருந்த இரு மாலுமிகளையும் படகைக் கரையை நோக்கிச் செலுத்துமாறு உத்தரவிட்டான் இளையபல்லவன். படகு சென்று கொண்டே இருக்கையில் மீண்டுமொருமுறை அந்தத் துறைமுகத்தின் அமைப்பையும், கோட்டையின் அமைப்பையும் நன்றாகக் கவனித்தான். அதன் பெரும் பாதுகாப்புகளையும் பலத்தையும் அவன் ஏற்கனவே எடை போட்டிருந்தானாகையால் படகில் சென்ற சமயத்தில் அவன் கண்ணுக்குத் தெரிந்ததெல்லாம் இன்பமான காட்சிகள் தான்.

அவனது மரக்கலம் துறைமுகத்துக்குள் வந்து நங்கூரம் பாய்ச்சிப் படகில் இறங்குவதற்குச் சுமார் இரண்டு நாழிகைகளுக்கு மேல் பிடித்திருந்தபடியால் அதிகாலையிலிருந்த பெரும் உஷ்ணம் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகி, எங்கும் பெரும் ஒளியையும் பெரும் திகைப்பையும் ஏற்படுத்தியிருந்ததால், கடலலைகள் தரையருகில் வருமுன்பாக மடிந்து மடிந்து ஏற்படுத்திய பெரும் திரைகள் பிரமாதமான ஒலியைப் பெற்றுக் கண்ணைப் பறித்தன.

அத்துடன் படகிலிருந்த வண்ணம் பக்கத்து நீரில் கைவைத்த இளையபல்லவன் அதுவும் லேசாக உஷ்ணப்பட்டிருந்ததைக் கண்டு "இத்தகைய உஷ்ணத்திலும் பலமான ஜீவராசிகள் வளருகின்றனவே!" என்று ஆச்சரியத்துடன் தனக்குள் சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில் பலமான வாளைமீன் ஒன்று அலை மட்டத்தில் துள்ளியெழுந்து மீண்டும் நீரில் மூழ்கியதைக் கவனித்தான்.

அதைத் தவிர அத்தனை கடலோசையையும் பிளந்துகொண்டு பகிட்பாரிஸான் மலைக்காட்டுப் பகுதியிலிருந்து துஷ்ட மிருகங்களின் கர்ஜனைகளும் கேட்பதைக் காதில் வாங்கிய இளைய பல்லவன், "உஷ்ணம் உயிரைக் குடிப்பதில்லை, உயிரை அளிக்கவே செய்கிறது. உயிரை அளிப்பது மட்டுமல்ல, உடலைத் திடமாகவும் அடிக்கிறது" என்று சொல்லிக் கொண்டவன் அதற்கு அத்தாட்சி கடலிலும் மலையிலும் மட்டுமில்லாது கடற்கரையிலும் கிடப்பதைக் கண்டான்.

தனது படகு தன்னந்தனியாக வருவதைக் கண்டதும் கடற்கரைக் குடிசை வட்டாரங்களில் நடவடிக்கை துரிதமாக ஏற்பட்டதையும், மூடிய குடிசைக் கதவுகள் திறக்கப்பட்டதையும் அவற்றிலிருந்து திடகாத்திரமான தலைகள் எட்டிப் பார்த்ததையும் கண்ட இளையபல்லவன், "நல்ல பலத்தை இந்த அக்ஷயமுனை உஷ்ணம் கொடுக்கத் தான் செய்கிறது. நல்லவேளை அதிக தைரியத்தை மட்டும் கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால் நாம் தப்புவது பெரும் கஷ்டம்" என்று தனக்குள் எண்ணமிட்டுச் சிறிது புன்முறுவலும் கொண்டான்.

எதிரே பிரிவு பிரிவாக இருந்த குடிசைகளில் வசித்திருந்த கொள்ளைக்காரரின் உரத்தை அவன் ஓரளவு எடை போட்டு விட்டதால் சிறிதும் லட்சியம் செய்யாமலே படகில் உட்கார்ந்து படகுக்கும் நாவாய்க்குமிடையிலிருந்த தூரத்தைக் கடந்ததன்றி, படகு கரையை அடைந்ததும் அந்த அலட்சியத்துடனேயே கரையில் குதித்து, "படகைத் திருப்பி மரக்கலத்துக்குக் கொண்டு செல்லுங்கள்" என்று தனது வீரர் இருவருக்கும் கட்டளையிட்டுத் தான் மட்டும் தனியாகக் கோட்டையை நோக்கி நடக்கலானான்.

அப்படி நடந்த சமயத்தில் அவன் எதையும் கவனிக்காதவன்போல், நடந்துகொண்டாலும் அவன் கண்கள் எதிர்நோக்கி வந்த ஆபத்தின் ஒவ்வோர் அசைவையும் கவனித்துக் கொண்டுதானிருந்தன.

அக்ஷயமுனைத் துறைமுகத்துக்குள் கப்பல் நுழைந்ததும் ஊதப்பட்ட கொம்புகளால் அதை அகூதாவின் கப்பலென்று நினைத்து ஓடி ஒளிந்த அக்ஷயமுனைக் கடலோரக் குடிசைவாசிகள் தூரத்தில் தங்கள் குடிசைகளிலிருந்து கப்பலில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கவனிக்கத் தவறவில்லையாகையால், கப்பல் நங்கூரம் பாய்ச்சியதையும் அதன் தளத்திலிருந்து அகூதாவின் தோற்றத்துக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத ஒரு வாலிபன் படகிலிறங்கியதையும் பார்த்ததும், தாங்கள் வீண் கலவரப்பட்டுவிட்டதை உணர்ந்து கொண்டார்கள். அத்துடன் அந்த மரக்கலத்தின் வாலிபத் தலைவன் தன்னந்தனியே படகில் கரை நோக்கி வந்ததும், அவர்களுக்குக் கொஞ்சநஞ்சமிருந்த சந்தேகமும் அச்சமும் நீங்கிவிடவே அவர்கள் குடிசைகளை விட்டு வெளிவந்தனர்.

தனித்தனியான குடிசைக் கூட்டங்களிலிருந்து திடுதிடுவென்று வெளிப்போந்த அந்த நானாவிதத் தோற்றமுள்ள பல நாட்டுக் கொள்ளைக்காரர்கள் திடீரெனப் பெருங் கூச்சலிட்டு, கத்திகள், பெரும் ஈட்டிகள், பின்புறத்திலிருந்து மண்டையில் தாக்கக்கூடிய வயிரம் பாய்ந்த மரக் கட்டைகள் முதலிய ஆயுதங்களுடன் கரையை நோக்கி விரைந்து வந்தார்கள். வந்தது அவர்கள் மட்டுமல்லாமல் அந்தக் குடிசையிலிருந்த பல நாட்டுப் பெண்களும் அவர்களுடன் ஓடி வந்தார்கள்.

மனிதக் கதம்பம்போல் பல வர்ணங்களுடன் தூரத்தே வந்த அந்தக் கூட்டத்தைக் கவனித்தும் அதைப்பற்றிச் சிறிதளவும் சிந்திக்காதவன் போல் மணலில் அவர்களை நோக்கி நடந்தான் இளைய பல்லவன்.

அந்தக் கொள்ளைக்காரர்கள் பலப்பல பிரிவுகளாக இருந்த குடிசைகளிலிருந்து தனித்தனிக் கூட்டங்களாகப் பிரிந்து கிளம்பினாலும் சற்று தூரத்தில் ஒன்றுசேர்ந்து விட்டதன்றி, நானாவிதக் கூச்சலுடனும், கேலிச் சிரிப்புடனும் வெகு வேகமாக இளையபல்லவனை அணுகினார்கள். அப்படி அணுகிய அந்த மனித அலை, இளைய பல்லவனை நெருங்கியதும் நல்ல மலைப் பகுதியைத் தாக்கும் கடலலை போலச் சிறிது உடைந்து பின்வாங்கியது. அந்தக் கொள்ளைக் கூட்டத்தின் முன்பகுதியிலிருந்தவர்கள் தங்கள் கூட்டத்தைப் பார்த்தும், ஆயுதங்களைப் பார்த்தும், சிறிதும் லட்சியம் செய்யாமல் வரும் அந்த வாலிபனின் துணிவைக் கண்டு சிறிது தயங்கினார்கள். அந்தத் தயக்கத்தின் விளைவாகக் கூட்டமும் சிறிது திடீரெனத் தேங்கியது. முன்வரிசை தேங்கியதால் பின் வரிசைகள் சிறிது சலனப்பட்டன. அத்தனையையும் கவனிக்கத் தவறாத கருணாகரபல்லவன், அவர்களை ஒருமுறை தன் கூரிய கண்களால் அளவெடுத்தான்.

கூட்டத்தில் பல நாட்டுச் சாதிகளிருப்பதையும், ஆனால் நெறி மருந்துக்குக்கூட அவர்களிடமில்லாததையும் அவர்கள் முகபாவத்திலிருந்தே அறிந்த சோழநாட்டுப் படைத்தலைவன் கூட்டத்தின் உட்புறத்திலிருந்த பல நாட்டுப் பெண்கள் மீதும் கண்களை ஓட்டி அவர்களில் பெரும்பாலோர் பிற நாடுகளிலிருந்தும் பிற நாட்டுக் கப்பல்களிலிருந்தும் கவரப்பட்டு வந்தவர்களென்பதையும், கற்புக்கும் அவர்களுக்கும் அதிக சம்பந்தமிருக்க முடியாதென்றும் தீர்மானித்துக் கொண்டான்.

அத்தனை பெண் முகங்களிலும் சில தூய முகங்களிருப்பதையும் கண்டு, "உலகத்தில் எங்கும் எப்பொழுதும் தூய்மைக்கும் இடமிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டான். முன்னணியில் தன் எதிரே ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு நின்ற கொள்ளைக்காரர்கள் குறை எதுவாயிருந்தாலும் அச்சம் அந்தக் குறைகளில் ஒன்றல்ல என்பதைத் திட்டமாக உணர்ந்து கொண்டான் சோழர்களின் படைத்தலைவன்.

அந்த முகங்களில் தன்னைக் கண்டதால் சற்றுக் குழப்பமிருந்ததேயொழிய அச்சத்தின் சாயை கிறிதுமில்லாததைக் கவனித்து, தான் சிறிது நிதானம் பிசகினாலும் தன் உயிர் செல்லாக்காசு பெறாதென்பதையும் தீர்மானித்துக் கொண்டான். கொம்புகள் ஊதப்பட்டதும் அவர்கள் ஓடி ஒளிந்து கொண்டதற்குக் காரணம் அச்சமேயென்றாலும் பெரும் படைகளே கேட்டு அஞ்சிய அகூதாவின் கொம்புகளின் சப்தத்தை அந்தக் கொள்ளைக்காரர்கள் செவிமடுத்துப் பயப்பட்டது பெரும் அச்சத்தின் அறிகுறியாகாது என்பதையும் புரிந்து கொண்டான்.

கொள்ளைக்காரர்களின் பலாபலத்தை இப்படி எடை போட்டுக் கொண்ட இளையபல்லவன், அவர்கள் தன்னை அணுகியதும் அவர்களைக் கூர்ந்து ஒருமுறை நோக்கினான்.

பிறகு அவர்கள் கைகளிலிருந்த பலவித ஆயுதங்களை நோக்கினான். "தனி மனிதனைக் கொல்ல எதற்கு இத்தனை ஆயுதங்கள்?" என்று படைத்தலைவன் ஒருவன் தன் வீரர்களைக் கேட்கும் அதிகாரத் தொனியில் அந்தக் கொள்ளைக் கூட்டத்தை நோக்கிக் கேட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம்

## சில நேரங்களில் சில மனிதர்கள்



ஒரு ரிசார்ட்டில் இருக்கும் அறைகளை சுத்தம் செய்யும் ரூம் மனேஜ்மெண்ட் வேலை பார்த்து வரும் ஏழை இளைஞன் மணி கண்டன் கொடுக்கும் வேலையை பொறுப்பில்லாமல் செய்து விட்டு மற்றவர்கள் மீது குற்றம் சொல்பவர். தனக்கான அங்கீகாரமும் மதிப்பும் கிடைக்கவில்லை என வருத்தத்தில் இருந்து வருகிறார்.

சினிமாவின் பிரபல இயக்குநராக திகழ்பவரின் மகன் அபிஹாசன். நண்பர்கள் அனைவரும் இணைந்து உருவாக்கிய அவருடைய முதல் படத்தில் நடித்து அதன் வெளியீட்டுக்காக காத்திருப்பவர். தன்னுடைய சிந்தனை மட்டுமே சரியானது என்று நினைத்து. உலகம் வேறு போக்கில் தப்பாக இயங்குவதாக நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

திருமணமாகி மனைவியுடன் வாழ்ந்து வருபவர் பிரவின். ஐடியில் பணிபுரிந்து ஆன்சைட்டில் வேலைக்கு செல்ல காத்திருக்கிறார். பணமும் புகழும் தான் உலகில் மதிப்பை அளிக்கும் என நம்புகிற இவர். யாரிடமும் உதவி கேட்டு தன் மதிப்பை இழந்துவிடக்கூடாது என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வருகிறார்.

இவர்கள் நான்கு பேரும் ஒரு மரணத்திற்கு காரணமாகி விடுகின்றனர். வெவ்வேறு திசையில் பயணிக்கும் இவர்கள் எப்படி ஒரு மரணத்தோட தொடர்பானார்கள்? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் கதையின் நாயகர்களாக நடித்திருக்கும் அசோக் செல்வன், அபிஹாசன், மணிகண்டன், பிரவின் என அனைவரின் நடிப்பும் எதார்த்தமாகவும் கதையின் நீரோட்டமாகவும் தென்படுகிறது. நாயகிகளாக நடித்திருக்கும் ரித்விகா, அஞ்சுகுரியன் மற்றும் ரியா ஆகியோர் கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார்கள். படத்தில் தோன்றும் சிறு சிறு கதாபாத்திரங்களும் அந்த கதையிலேயே பயணித்து அவர்களின் நடிப்பையும் எதார்த்தமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

நீண்ட நாட்களுக்கு பிறகு ஒரு அழகான உணர்வுபூர்வ திருப்தியை தருகிற படமாக சில நேரங்களில் சில மனிதர்கள் திரைப்படம் அமைந்திருக்கிறது.

மிக நேர்த்தியான திரைக்கதை, சினிமாவுக்கான எந்தப் பூச்சும் இல்லாமல் கதையை தவிர்த்து வேறு எங்கும் செல்லாமல் அழகாக அந்த வாழ்க்கைக்குள் நம்மை கொண்டு சேர்த்து விடுகிறார் இயக்குநர் விஷால் வெங்கட்.

படத்தின் காட்சிகளை படம்பிடித்திருக்கும் ஒளிப்பதிவாளர் மெய்யேந்திரன், பார்வையாளர்களை அந்த இடத்திற்கே கடத்தி கொண்டு போகும் அளவிற்கு காட்சிப்படுத்தியிருக்கிறார். படத்திற்கு கூடுதல் பலம் இசை. ரதனின் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம். பின்னணி இசையில் பலருடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்.

மொத்தத்தில் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' நல்ல நேரம்.

## பிறந்தநாளில் வெளியாகும் சிம்புவின் திருமண அறிவிப்பு ?



ஆர்யா, விஷால், சிம்பு இந்த மூன்று பேர்தான் தமிழ் சினிமாவில் நீண்ட நாட்களாக தங்களது திருமணத்தை தள்ளிப்போட்டுக்கொண்டு வந்த ஹீரோக்கள்... ஆனால் ஆர்யாவின் வாழ்க்கையில் திடீர் புயலாக நுழைந்து திருப்பத்தை ஏற்படுத்தி அவரை குடும்பஸ்தனாக மாற்றி விட்டார் சாயிஷா. விஷாலின் திருமண விஷயம் நிச்சயதார்த்தம் வரை நடந்து, பின் நின்று போனது தனி சோகக்கதை.

இதில் சிம்புவின் திருமணம் குறித்து அவ்வப்போது செய்திகள் பரபரப்பாக பேசப்பட்டு பின் அப்படியே அமுங்கி விடுவது வழக்கம் தான். அதேசமயம் தன்னுடன் ஈஸ்வரன் படத்தில் ஜோடியாக நடித்த நடிகை நிதி அகர்வாலை காதலித்து வருகிறார் என்றும் அவரைத்தான் திருமணம் செய்ய போகிறார் என்றும் கடந்த சில நாட்களுக்கு முன் கூட பரபரப்பான செய்தி வெளியானது..

இந்த நிலையில் வரும் பெப்ரவரி 3 ஆம் திகதி சிம்புவின் பிறந்தநாள் வருகிறது. அன்றைய தினத்தில் ரசிகர்களுக்கு ஸ்பெஷல் சர்ப்ரைஸாக சிம்புவின் திருமண அறிவிப்பு வெளியாகலாம் என்றும் தற்போது சோஷியல் மீடியாவில் ஒரு செய்தி பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. பல வருடங்களுக்கு பிறகு மாநாடு படத்தின் மூலம் மிகப்பெரிய வெற்றியை ருசித்திருக்கும் சிம்பு சூட்டோடு சூடாக திருமண அறிவிப்பையும் வெளியிடுவாரா? என்பது தான் சிம்பு ரசிகர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

## விஜய் - அஜித்துடன் நீண்ட இடைவெளிக்குப் பின் கைகோர்க்கும் பிரகாஷ்ராஜ்



எல்லா முன்னணி நடிகர்களின் படங்களிலும் அவர்களுக்கு தந்தையாக அல்லது அவர்களுக்கு வில்லனாக என ஒரு காலத்தில் தவறாமல் இடம்பெற்று வந்தவர்தான் நடிகர் பிரகாஷ்ராஜ். தெலுங்கில் இப்போதும் அது தொடர்ந்தாலும் கூட, தமிழில் விஜய், அஜித் என இரண்டு பேருடனும் அவர் இணைந்து நடித்து கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

விஜய்யுடன் கடைசியாக வில்லு படத்திலும் அஜித்துடன் பரமசிவன் படத்திலும் இணைந்து நடித்திருந்தார் பிரகாஷ்ராஜ். இந்த நிலையில் நீண்ட இடைவெளிக்கு பிறகு அதாவது விஜய்யுடன் 11 வருடங்களுக்கு பிறகும் அஜித்துடன் 16 வருடங்களுக்குள பிறகும் பிரகாஷ்ராஜ் இணைந்து நடிக்கவுள்ளார் என்கிற தகவல் ஒன்று தற்போது வெளியாகியுள்ளது.

தெலுங்கில் முதன்முறையாக விஜய் நடிக்கும் படத்தில் பிரகாஷ்ராஜும் நடிக்க இருக்கிறாராம். இந்தப்படத்தின் இயக்குநர் வம்சி பைடிப்பள்ளி இதற்கு முன் இயக்கிய தோழா படத்திலும் பிரகாஷ்ராஜ் முக்கிய வேடத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல மூன்றாவது முறையாக அஜித் - ஹெச்.வினோத் கூட்டணி சேரும் படத்திலும் அஜித் முக்கிய வேடத்தில் நடிக்க இருக்கிறார் என்றும் சொல்லப்பட்டு வருகிறது. ரசிகர்கள் எப்போதுமே இந்த கில்லி கூட்டணியை மீண்டும் "ஆசை"யுடன் ரசிக்க காத்திருக்கிறார்கள் என தாராளமாக சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : சிந்து பைரவி
இயற்றியவர் : வைரமுத்து
இசை : இளையராஜா
பாடியவர்கள் : கே.எஸ்.சித்ரா



நானொரு சிந்து காவடிச்சிந்து

நானொரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள சோகம் தெரியவில்ல
தந்தையிருந்தும் தாயுமிருந்தும்
சொந்தம் எதுவுமில்ல அத சொல்லத்தெரியவில்ல

நானொரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள சோகம் தெரியவில்ல
தந்தையிருந்தும் தாயுமிருந்தும்
சொந்தம் எதுவுமில்ல அத சொல்லத்தெரியவில்ல

நானொரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள சோகம் தெரியவில்ல

இல்லாத உறவுக்கு என்னென்ன பேரோ
நாடோடிப் பாட்டுக்குத் தாய்தந்தை யாரோ

இல்லாத உறவுக்கு என்னென்ன பேரோ
நாடோடிப் பாட்டுக்குத் தாய்தந்தை யாரோ

விதியோடு நான் ஆடும் விளையாட்டு பாரு
வெளையாத காட்டுக்கு வெத போட்டதாரு

பாட்டு படிச்ச சங்கதி உண்டு என் பாட்டுக்குள்ளேயும்
சங்கதி உண்டு கண்டுபிடி

நானொரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள சோகம் தெரியவில்ல

பெண் கன்று பசு தேடி பார்க்கின்ற வேளை
அம்மான்னு சொல்லவும் அதிகாரமில்லை

பெண் கன்று பசு தேடி பார்க்கின்ற வேளை
அம்மான்னு சொல்லவும் அதிகாரமில்லை

என் விதி அப்போதே தெரிஞ்சிருந்தாலே
கர்பத்தில் நானே கலைஞ்சிருப்பேனே

தலையெழுத்தென்ன என் மொதல் எழுத்தென்ன
தலையெழுத்தென்ன என் மொதல் எழுத்தென்ன
சொல்லுங்களேன்

நானொரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள சோகம் தெரியவில்ல
தந்தையிருந்தும் தாயுமிருந்தும்
சொந்தம் எதுவுமில்ல அத சொல்லத்தெரியவில்ல

நானொரு சிந்து காவடிச்சிந்து
ராகம் புரியவில்ல உள்ள சோகம் தெரியவில்ல

# கோலியைக் காதலிப்பதற்கான காலம்!

இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் கப்டன் பதவியை இராஜினாமா செய்திருக்கிறார் விராட் கோலி. ஓகஸ்ட் மாதம் மூன்று ஃபார்மட்களிலும் இந்திய அணிக்குத் தலைமை தாங்கியவர் இனி பேட்டர் மட்டும்தான். கப்டன் விராட் கோலி எனும் வார்த்தைக்கு முன்னால் 'முன்னாள்' என்ற வார்த்தை சேர நான்கு மாதங்களே ஆகியிருக்கின்றன!

அரசியல், ஈகோ எனப் பல்வேறு காரணங்கள் கோலியோடு விளையாடியிருக்கின்றன. இருபது-20 கப்டன் பதவியிலிருந்து விலகிய போது. "ஒரு நாள் மற்றும் டெஸ்ட் அணி களை வழிநடத்துவதற்கு போதுமான ஸ்பேஸ் எனக்குத் தேவைப்படுகிறது" என்று குறிப் பிட்டிருந்தார் கோலி. அந்த இரண்டு ஃபார்மட்களிலும் அணியை வழிநடத்த ஆர்வமாக இருந்தார். ஆனால், அவருக்குத் தேவைப்பட்ட அந்த ஸ்பேசைக் கொடுக்காமல், நெருக்கி வெளியே தள்ளியிருக்கிறது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம். இந்திய கிரிக்கெட்டின் ஈகோ யுத்தப் பட்டியலில் லேட்டஸ்ட் வரவாக இது இணைந் திருக்கிறது.

விராட் கோலி கப்டனாக இருந்த இந்த ஏழாண்டுகளை அலசினால், அவரைக் கொண்டாடவும் செய்யலாம். விமர்சிக்கவும் செய்யலாம். ஒரு நாள், இருபது-20 போட்டிகளில் அவரது கப்டன்சியை விமர்சித்த பலரும், ஒரு டெஸ்ட் கேப்டனாக அவரைப் பாராட்டியிருக்கிறார்கள். ஒரு சிலர், டெஸ்ட் அணியின் முன்னேற்றத்துக்கு அவர் பெரிதாக ஒன்றும் செய்திடவில்லை என்று வாதாடுகிறார்கள். இந்தியாவுக்கு மிகச் சிறந்த வீரர்கள் இருந்தனர், அட்டகாசமான பௌலர்கள் கிடைத்தனர்,

தேசிய கிரிக்கெட் அகாடெமியில் டிராவிட்டும் இந்திய அணியில் பரத் அருணும் வேகப்பந்து வீச்சாளர்களைச் சிறப் பாக உருவாக்கி மெருகேற்றினர் என்ற வாதங்களையும் கோலியின் இராஜினாமாவுக்குக் காரணமாகப் பார்க்க முடிகிறது.

இந்தக் காரணங்களை ஒதுக்கிவிட முடியாது என்றாலும், அனைத்தையும் ஒன்றிணைத்த கோலியையும், அதை வெற்றியை நோக்கிச் செலுத்திய கோலியின் அணுகுமுறையையும் தவிர்த்துவிட முடியாது. ஆனால், மறுபடியும் விவாதங்கள் செய்யத் தேவையில்லை. கோலி அதைச் செய்தார், இதைச் செய்தார் என்று திரும்பத் திரும்ப எழுதித்தான் அவரைக் கொண்டாட வேண்டும் என்றில்லை. ஒருவகையில், இந்த முடிவே அவரைக் கொண்டாடுவதற்குப் போடப் பட்டிருக்கும் பந்தக்கால்தான்! இந்த ஏழு வருடம் என்ன நடந்தது என்பதை விட்டுவிடுவோம். அவர் என்ன செய்தார் என்பதை விட்டு விடுவோம். அடுத்த நான்கைந்து ஆண்டுகள் என்ன காத்திருக்கிறது என்று யோசித்தால், கோலிக்கு மீண்டும் நல்ல காலம் பிறக்கப் போவதாகத் தெரிகிறது.



பதவி விலகுவதாக சமூக வலைத்தளங்களில் கோலி வெளியிட்ட கடிதத்தில் இரண்டு வரிகள் மிகவும் முக்கியமானவை. "எந்த விடயத்தையும் 120 சதவிகிதம் அர்ப்பணிப்போடு செய்ய வேண்டும் என்று நினைப்பேன். அப்படி முடியாத போது அதைச் செய்வது சரியல்ல" என்றிருக்கிறார் விராட். ஒரு கப்டனாக உண்மையாகவே கோலி அதை இழந்தி ருக்கிறார். உண்மையை இழந் திருக்கிறார்.

கடந்த சில மாதங்களாக, ஒவ்வொரு முடிவுக்கும் ஒரு கேவலமான காரணத்தை வெளியிடத் தொடங்கியது இந்திய அணி. விமர்சனங்களுக்கு எதிரான பயமே அதற்குப் பின்னணியில் தெரிந்தது. விமர்சனங்களுக்கு பயந்து உண்மை மறைந்தது. அதற்குப் பின்னால் தான் சதங்களாக அடித்துக் குவித்த கோலியும் மறைந்தார்.

இப்போது அந்தக் கடிதத்தில் இடம்பெற்றிருக்கும் வார்த்தை. அந்தப் பழைய கோலி மீண்டு வரப்போகிறார் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது.

தன்னால் முழுமையான அர்ப்பணிப்போடு இயங்க முடியவில்லை என்று மனதில் இருந்து நேர்மையாகச் சொல்லியிருக்கிறார் விராட். ஏனெனில், இனி விமர்சனங்கள் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை.

ஏழாண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையை யோசித்துப் பாருங்கள். ஏன் அஷ்வினை எடுக்கவில்லை, ஏன் ரஹானேவை எடுத்தீர்கள், ஏன் 2 ஸ்பின்னர்கள் இல்லை, ஏன் சூர்யகுமார் இல்லை என்ற கேள்விகள் இல்லாத காலம். விமர்சனங்கள் இல்லாத காலம். டாஸ் போடும் முன்பே, களத்திற்குள் நுழையும் முன்பே, விமர்சனங்கள் பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் இல்லாத காலம். விராட் கோலி ரன் மெஷினாக உருவெடுத்த காலம் அது. அந்தக் காலம் மீண்டும் திரும்பப் போகிறது.

இனி யாரும் கோலியிடம் கேள்விகள் கேட்கப்போவதில்லை. யாரும் அவர் முடிவுகளை விமர்சனம் செய்யப் போவதில்லை. அவரும் களத்தில் எந்தத் தவறும் செய்யப் போவதில்லை. இனி அவர் ஒரு தவறு செய்கிறாரென்றால், அது அவுட் சைட் ஆஃப் ஸ்டம் புக்கு வரும் பந்தைப் பின்னால் தொட்டுக் கொடுத்து கேட்ச் ஆவது மட்டுமாகத் தான் இருக்கும். வேறொரு தவற்றை இனி கோலியிடமிருந்து பார்க்க முடியாது. இனி அவரை விமர்சிக்க முடியாது. இனி அவரைக் கேள்விகள் கேட்க முடியாது.

வலி மிகுந்த அந்தக் கடிதத்தின் வார்த்தைகள், பழைய கோலியின் பிரதிபலிப்பாகவே தெரிகிறது. அந்தக் கோலியைக் காதலிக்க மட்டுமே முடியும். அவர் கிரிக்கெட்டை ஆராதிக்க மட்டுமே முடியும். அடுத்த சில ஆண்டுகள் கோலியைக் காதலிப்பதற்கான காலம்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈபிள் கோபுரம் (பிரான்ஸ்)


ஈபிள் கோபுரம்

அவரது ஈபிள் கட்டுமான நிறுவனத்தின் சார்பில் கோபுரம் ஒன்றைக் கட்ட அரசிடம் அனுமதி பெற்றார். ஈபிள் டவருக்கான மாதிரி வரைபடங்களை அனுப்பும்படி அறிவிப்பு வெளியிடப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட மாதிரி வரைபடங்கள் வந்து குவிந்தன. அவற்றுள் மவுரிஸ் கொயிச்சனின் வரை படம் ஓரளவுக்கு குஸ்டோவ்க்கு பிடித்திருந்தது. இருப்பினும் தான் எதிர்பார்த்த மாற்றங்களை அதில் சேர்த்தால் ஏற்றுக்கொள்வதாக குஸ்டோவ் தெரிவித்தார்.

மவுரிஸ் மற்றொரு பொறியாளரான எமிலி நோகியர் என்பவருடன் சேர்ந்து ஒரு புதிய வரைபடத்தை உருவாக்கினார். அந்தக் கோபுரத்தின் கீழ் பகுதியில் சில கண்ணாடி வேலைப்பாடுகளை வடிவமைத்த ஸ்டீபன் சாவெஸ்ட்ராவையும் சேர்த்துக் கொண்டனர்.

2.54 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் 300 மீற்றர் உயரத்தில் 18 ஆயிரம் இரும்புத் துண்டுகளைக் கொண்டு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் கட்டப்பட்டது. வெறும் 300 தொழிலாளர்கள் மட்டுமே அந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மிகுந்த பாதுகாப்புடன் நிறைவேற்றப்பட்ட கோபுரப் பணியில் ஒருவர் மட்டும்தான் துரதிர்ஷ்டவசமாக இறந்து போனார்.

மூன்று நிலைகளாக பிரிக்கப்பட்டு கட்டப்பட்ட ஈபிள் கோபுரத்தின் முதல் நிலை தரையிலிருந்து சுமார் 190 அடியிலும் இரண்டாம் நிலை தரையிலிருந்து 376 ஆவது அடியிலும் மூன்றாவது நிலை 900 அடியிலும் நிறுவப்பட்டன. பார்வையாளர்கள் செல்ல இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. படிகள் வழியே செல்ல ஒரு நுழைவாயிலும், மின்தூக்கி மூலம் செல்ல மற்றொரு நுழைவாயிலும் உண்டு. கோபுரத்தின் முதல் நிலை வரை செல்ல 300 படிகள் உள்ளன. அதற்குப் பிறகு மூன்றாம் நிலை வரை செல்ல மின் தூக்கிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். படிகளும் உண்டு என்றாலும் பாதுகாப்புக் கருதி பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை.

கோபுரத்தின் முதல் தளத்தில் இரண்டு உணவு விடுதிகள் மற்றும் 250 பேர் அமரக்கூடிய அரங்கும் உள்ளன. மூன்றாவது தளத்தில் பொதுமக்களுக்கான அவதானிப்பு நிலையம் ஒன்று உண்டு. கோபுரத்தின் முதல் தளத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் பிரான்சின் தலைசிறந்த விஞ்ஞானிகள், பொறியாளர்கள், கணித மேதைகள் 72 பேரின் பெயர்கள் என்க்ரேவிங் முறையில் பதித்து வைக்கப்பட்டுள்ளன.

கோபுரத்துக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மொத்த எடை 8092 தொன்களாகும், மின் தூக்கிகளின் எடை 1042 தொன்கள். ஆக மொத்தம் 9134 தொன்கள் எடை கொண்டது ஈபிள் கோபுரம். (தொடரும்..)

## ஹிட்லரும் ஈபிள் கோபுரமும்...



இரண்டாம் உலகப்போரின் போது அடால்ப் ஹிட்லர் தனது நாஜிப்படைகளோடு பாரிஸ் வந்திருந்தார். அவர் ஈபிள் கோபுரத்தை தவறாகப் பயன்படுத்தி விடக்கூடும் என்று கருதிய பிரஞ்சுக்காரர் ஒருவர் கோபுரத்தின் மின் தூக்கிகளை செயலிழக்கச் செய்து விட்டார். ஹிட்லர் கோபுரத்தின் கீழ்தளத்தை மட்டும் சுற்றிப் பார்த்து விட்டு, பாரிசை விட்டுச் சென்று விட்டார். அதன் பின்னர்தான் மின் தூக்கிகள் செயற்படத் தொடங்கின.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2498

**ராகுல்**

கோழி மைண்டு வாய்ஸ்...



ஆமாடா இப்ப மூனு கலர பூசுவீங்க... நாளைக்கு உரிச்சி மஞ்சளை பூசுவீங்க...

**ரவி**

ரெண்டு சீப்பு வாழைப்பழம் வாங்கிட்டு வர சொன்னாரு... நீங்களே பாருங்க... சரியாதானே வாங்கிட்டு வந்திருக்கேன்



அப்புறம் எதுக்கு என்னை அடிக்க வாராரு...?

**ஆஷா**

வீட்ல இருந்தா வேலைக்குப் போகலாமுன்னு தோணுது... வேலைக்குப் போனா Leave போடலாமுன்னு தோணுது...



என்ன மானங்கெட்ட மனசோ தெரியலயே

**நதியா**

குளிர் காலத்தில்

*தம்பி இன்றைக்கு குளிக்க வேணாம் ரொம்ப குளிருது... நாளைக்குப் குளிப்போம்*



**டினு**


முன்னெல்லாம் ஐஸ்கிறீம், கூல் ட்ரிங்ஸ் குடிச்சாத்தான் சளி பிடிக்கும்....



இப்ப சும்மா இருந்தாலே சளி பிடிக்குதே...

**கேதீஸ்வரா**

இந்தா கரண் கட்... சும்மா பகிடிக்கு.. ஏண்டா எங்களை பைத்தியமாக்குகிறீங்க



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

276

வலம்புரியின் மருத்துவச்சுடர்



## சமயக் கருத்துக்கள் காலத்திற்கு ஏற்ற வகையில் விஞ்ஞான மயப்படுத்தப்படுவது....

ஆரோக்கியம் என்பது நோயற்ற நிலை மாத்திரமல்ல அதனுடன் உள, சமூக, ஆன்மிக, சுற்றாடல் நன்னிலையும் சேர்ந்த ஒரு உன்னத நிலையே உண்மையான சுகம் என்று பல உலக சுகாதார விற்பன்னர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

மத ஆன்மிக நம்பிக்கை மனிதனை பூரணப்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பதுடன் மதமும் மருத்துவமும் மனிதனின் சுகாதார மேம்பாட்டிற்கான இரண்டு கண்களாகவும் இருக்கின்றன.

இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் கி.மு.3500 வருடங்களுக்கு முன் சிந்துவெளிப் பிரதேசத்திலே தோற்றம் பெற்றிருந்ததாக புதைபொருள் ஆராய்ச்சிகள் சான்று பகர்கின்றன. ஆனால் தற்போது அறியப்படாமல் இருக்கும் வேறு சில மதங்களின் அடிப்படைக் கருத்துக்கள் அதற்கு முன்னதாகவே தோற்றம் பெற்றிருக்கக் கூடும்.

அக்காலப் பகுதியில் மருத்துவப் பொருட்கள், அறுவை மருத்துவம், நோய்த் தடுப்பு முறைகள் ஆகியவை அக்கால மக்களால் அறியப்பட்டிருந்தன என்பதற்கான வரலாற்று சான்றுகள் பல கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

சிந்துவெளிப் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற இந்து மதக்கருத்துக்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு அது இந்துமதமாகத் தோற்றம் பெற்றது கி.மு.1500 வருடங்களுக்கு முற்பட்ட காலப் பகுதி என்று கருதப்படுகிறது. இதனை வேதகாலம் என்று சொல்வார்கள். இந்த வேத காலத்திலே மதப் பெரியவர்கள் மருத்துவத் தொண்டையும் ஆன்மிகத் தொண்டையும் ஒருங்கே ஆற்றி வந்ததற்கான சான்றுகள் தென்படுகின்றன.

பல கிறிஸ்தவமத நிறுவனங்களும் இந்துமத நிறுவனங்களும் மருத்துவச் சேவைக்குப் பெரும் பங்காற்றி வருகின்றன. உள வளத் துணைக்கும் பாதிக்கப்பட்டவர்களின் ஆற்றுப்படுத்துகைக்கும் கிறிஸ்தவ அமைப்புகள் ஆற்றி வரும் பங்கு அளப்பரியது. பல மதம் சார்ந்த அமைப்புகள் மருத்துவமனைகளையே வழிநடத்தி வருகின்றன.

திராவிடர்களின் மருத்துவ முறையாக வளர்ச்சி பெற்ற சித்த மருத்துவத்தின் தத்துவங்கள் ஆரம்பத்திலே சிவனினால் சக்தியிடம் கையளிக்கப்பட்டு சக்தி அதனை நந்தியிடம் கொடுத்து நந்தி அதனை சித்தர்களிடம் சேர்ப்பித்தார் என்று பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தத்துவங்கள் ஆரம்பத்திலே 18 சித்தர்களினால் கையாளப்பட்டிருக்கின்றன.

இந்த சித்தர்களிலே முக்கியமானவராக அகத்தியர் இருந்திருக்கிறார். இந்த அகத்தியரின் தலைமையிலேயே சித்த மருத்துவம் முழுமையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்த கருத்துக்களை நம்புகிறோமோ என்பது முக்கியமல்ல. ஆனால் அக்காலத்திலிருந்தே மதமும் மருத்துவமும் ஒருங்கிணைந்து செயற்பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்த அண்ட சராசரங்கள் அனைத்தினதும் இயக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது energy என்று சொல்லப்படுகின்ற சக்தி என்பது உலகறிந்த உண்மை. சக்தி இன்றி எதுவும் இயங்க முடியாது. அந்த சக்தி தான் சிவனின் சரிபாதி என்றும் அவள் தான் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறாள் என்றும் இந்துமதம் சொல்கிறது. இந்த உடல் இயக்கமும் சக்தியும் தான் மருத்துவத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது.

தினமும் அதிகாலையில் எழுந்து குளித்து தோய்த்து உலர்ந்த ஆடை தரித்து கோயிலுக்குச் சென்று கோயிலை 3 தடவை வலம் வந்து ஆசனங்கள், அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து இறை வணக்கம் செய்ய வேண்டும் என்று இந்துமதம் சொல்கிறது. இங்கே உடைச் சுத்தம், உடல் சுத்தம், உடற் பயிற்சி, மன அமைதி என்ற நான்கு சுகாதார அறிவுரைகள் அடங்கி இருக்கின்றன.

பஞ்சமா பாதங்களை தவிர்க்குமாறு மதங்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றன. இந்த பஞ்சமா பாதங்களில் அடங்கியிருக்கும் கள், காமம் எனப்படுகின்ற மது அருந்துதல் தகாத பாலியல் தொடர்புகள் என்பவற்றை தவிர்த்து விடுவதன் மூலம் எயிட்ஸ் போன்ற பல கொடிய தொற்று நோய்களிலிருந்தும் ஈரல், நரம்புகள், சம்பந்தமான நோய்களிலிருந்தும் எம்மை தற்காத்துக் கொள்ள முடியும். விரத காலங்களிலே மாப்பொருள் தவிர்த்து பால், பழங்கள், உண்ணும் மரபு அன்றிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

பால், பழங்களிலே வினைத்திறன் கூடிய புரதங்களும் விற்றமின்களும் கனியுப்புக்களும் நார்ப்பொருள்களும் இருப்பதுடன் இது உடல் நிறையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய ஒரு நிறை உணவாகவும் விளங்குகிறது.

சூரிய நமஸ்காரம் எமது வழிபாட்டு முறைகளில் முக்கியமானது. இது காலையில் சூரிய ஒளியிலிருந்து சூரியனை நோக்கி நமஸ்காரம் செய்யும் ஒரு முறையாகும். இதனையே மேலைத்தேச நாடுகளிலே மருத்துவத் தேவைகளுக்காக சன்பாத் என்று செய்து வருகின்றார்கள். இதன்மூலம் பல எலும்பு, பல் சம்பந்தமான நோய்களைத் தடுக்க முடியும்.

வேத காலத்திலே தோன்றிய அதர்வண வேதத்தின் உப வேதங்களில் ஒன்றாக ஆயுர்வேத மருத்துவம் கருதப்படுகிறது. சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டுள்ள இந்த மருத்துவத்தில் நோய்களைக் குணமாக்கும் பல மார்க்கங்கள் குறிப்பிடப்படிருக்கின்றன. சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் தமிழ் மருத்துவர்களை ஆயுர்வேதர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டைய யுத்தங்களிலே காயமுற்றோருக்கு பல சத்திர சிகிச்சைகள் நடத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இதற்கு அவர்கள் செப்பு கத்திகளை பயன்படுத்தி இருக்கின்றார்கள். இரும்புக் கத்திகளை பாவித்தால் துருப்பிடித்து அதிலே ஏற்பு வலி போன்ற கொடிய நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் வளரும் ஆபத்து அதிகமாகக் காணப்பட்டதால் தொற்று நீக்கும் வசதிகளற்ற அந்தக் காலத்திலே புத்தி சாதுரியமாக பாதுகாப்பான செப்புக் கத்திகளை அந்தச் சித்தர்கள் பாவித்திருக்கிறார்கள்.

இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்துவரும் யோகாசனப் பயிற்சி முறையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் சைவ சித்தர்களே. இன்றும் இந்த யோகாசனப் பயிற்சி முறை பல தொற்று நோய்களின் கட்டுப்பாட்டிற்கு பெரும் பங்காற்றி வருகிறது.

மனிதனை இறைவன் பகுத்தறிவுடன் படைத்திருக்கிறான். எனவே மதக் கருத்துகளும் மனிதனின் பகுத்தறிவால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால் மட்டுமே அவை மனிதனை வழிநடத்தும். எனவே மதக் கருத்துக்களும் விஞ்ஞான மயப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு தேவை எழுந்திருக்கின்றது.

சிந்துவெளியிலே இருந்த வழிபாட்டு முறைகளுக்கும் வேதகாலத்து வழிபாட்டு முறைகளுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உபநிடத காலத்திலே சமயக் கருத்துக்கள் மீள ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன.

சங்க காலத்திலே மதக் கருத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு பல விடயங்கள் புதிதாக சேர்க்கப்பட்டு தொகுக்கப்பட்டிருக்கின்றன. எனவே காலத்திற்குக் காலம் காலத்திற்கு ஏற்றாற்போல மீளாய்வு செய்யப்பட்டு வரும் சமயக் கருத்துக்கள் தற்போதைய காலத்திற்கு ஏற்ற வகையிலும் மீளாய்வு செய்யப்பட்டு விஞ்ஞான மயப்படுத்தப்படுவது தவறான செயலாகாது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org